# சைவநீதி



ஈசுர புரட்டாதி

விலை
ரூபா. 20/=

உள்ளே------------------------------


| | | |
|---|---|---|
| 1. | மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் | 1 |
| 2. | இராறுதோல் இலக்கண வித்தகர். அ. நமசிவாய தேசிகர் | 2 |
| 3. | சேக்கிழார் காட்டுஞ் சைவநீதி பண்டிதர். மு. கந்தையா | 3 |
| 4. | கோளறு பதிகம் | 4 |
| 5. | சிவஞான போதம் - அமைப்பும் சிறப்பும் ஞானப் பிரகாசசிவம் மெய்கண்டார் ஆதீனம் | 6 |
| 6. | நரசிங்க முனையரைய நாயனார் சிவசண்முக வடிவேல் | 8 |
| 7. | பயில்வோர் பயிற்சிக்கு - மாதினி | 9 |
| 8. | மும்மல காரியம் சைவப்புலவர் அ. இரத்தினம் | 10 |
| 9. | நொடித்தான் மலை உத்தமன் முருக. வே. பரமநாதன் | 12 |
| 10. | திருவாசகச் சிந்தனை சிவபுராணம் பண்டிதர் சி. அப்புத்துரை | 14 |
| 11. | மாத மகத்துவம் செல்லையா நவநீதகுமார் | |
| | சனீஸ்வரவழிபாடு | 16 |
| | நவராத்திரி | 19 |
| | மாளயம் | 20 |
| | கேதார கௌரி விரதம் | 21 |
| 12. | மெய்கண்டார் ஆதீன வெள்ளி விழா இராம. நகுலேசன் | 22 |
| 13. | நினைவிற் கொள்வதற்கு | 23 |
| 14. | “ | 24 |



இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினருக்காக 61/1F, பீர்சாய்பு வீதி, கொழும்பு 12. ஸ்ரீ சக்தி பிறின்டிங் இண்டஸ்ரீசில் அச்சிட்டு 15-11-97 இல் வெளியிடப்பட்டது.

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் :1 ஈசுர புரட்டாதி சைவ சமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ்: 6

கௌரவ ஆசிரியர்
**சைவப்புலவர்மணி வித்துவான்**
**திரு.வ. செல்லையா**

நிர்வாக ஆசிரியர்
**சிவஸ்ரீ பால ரவிசங்கரக்குருக்கள்**
**திரு. செ. நவநீதகுமார்**

42, டிவாஸ் ஒழுங்கை
கிராண்ட்பாஸ்,
கொழும்பு 14.
தொலைபேசி : 423895

பதிப்பாசிரியர்
**திரு.ச.சக்தி விக்னேஷ்வரன்**

## மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

இது திருஞான சம்பந்த மூர்த்திநாயனாரின் அருள்வாக்கு. சிவனடியார்களின் திருவாக்கு எப்பொழுதும் பொய்த்ததில்லை. பொய்யடிமையில்லாத மெய்யடியார்கள் அவர்கள். அவர்களின் வாக்கு மணிவாக்கு. பலிக்கும் மந்திரம்போன்றது. மந்திரம், தேவு, மருந்து, குருவருள் என்பன மெய்யென்னில்மெய். பொய்யென்னில் பொய்யாகிப்போம்.

இங்கு நம்பிக்கை ஒன்றினைக்கொள்ளவேண்டும். நமது வாழ்க்கை நம்பிக்கையிலே தங்கியுள்ளது. நம்பிக்கையில் தன் நம்பிக்கை முதன்மையானது. தன்னம்பிக்கையுடன் முயற்சியும் வேண்டற்பாலது. இவைஇரண்டுங்கூட நல்வாழ்கையும் அமையும். இவையின்றி நல்வாழ்க்கைகூடாதாம்.

முன்னைச்செய்புண்ணியப்பயனாய் மண்ணிடை மானிடராய்ப்பிறந்தோம். அதுவுங்கூட குருடு செவிடு நீங்கிப்பிறந்தோம். அங்ஙனங்கிடைத்த நற்பேற்றுக்காக நாம் கடவுளை வணங்கி நன்னெறியில் ஒழுகல் வேண்டும். பொய், களவு, சூது அகற்றி நல்வழிபற்றி நன்முயற்சியோடு வாழ்தலே நல்ல வண்ணம்வாழ்தலாம். இவற்றுக்கெல்லாம் மனமே பிரதானமானது. "போதுமென்ற மனமே பொன் செய்யும்மருந்து" எதிலும் ஓர்அளவுவேண்டும். அளவுக்குமிஞ்சிய நினைப்பே பேராசையாகும். பேராசை நம்மைக்கெடுத்து விடும். அதனையும் அகற்றினால் தான் மண்ணின்மேல் நல்லவண்ணம் வாழ்தல் அமையும். மனம்போல வாழ்வு என்பதனையும் இங்குநினைவு கூரவேண்டும்.

'வாழ்க்கை வாழுதற்கே' என்ற தாரகமந்திரத்தை எப்போதும் கடைப்பிடித்து வரவேண்டும். வாழ்வும் தாழ்வும் எங்கள்கையிலேயே இருக்கின்றன. எங்கள் செயற்பாட்டின்பிழையே தாழ்வு. இதுதான் நமக்குத்தீரா இடும்பையைத்தருகின்றது. எங்கள் செயற்பாட்டுத்திறனே எங்களுக்கு நல்வாழ்க்கையை அமைத்துத் தருகிறது. நாம் வாழ்ந்தாற்போதும் என்றிருப்பதுதவறு. நாமும் பிறரும் வாழ்வதோடு நாடுஞ் சிறக்கவேண்டும்.

எழுநிலைமாடியில் மனைவிமக்களுடன் கூடிச் செல்வந்தராய் வாழ்தலே நல்லவண்ணம் வாழ்தல் என்று கருதிவிடக்கூடாது. சிறு குடிசையாயினும் மாண்புடைமனைவியோடு பண்பான மக்களும்பெற்று அன்புடன் வாழ்க்கை வாழுதலே சிறந்தவாழ்க்கை பின்னவர் வாழ்க்கையில் அன்பு, பண்பு, ஆதரவு பொலிகிறது. மிகிழ்வும் உள்ளீடாக இருக்கிறது. ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி உப்பிலாக்கூழ் இட்டாலும் உண்பது அமிர்தமாகும். இது உள்ளத்தில் கள்ளமில்லா வாழ்க்கை. வாழ்க்கையின் திட்பநுட்பங்க ளைப்புரிந்து கொண்டு பண்பானவாழ்க்கை வாழ்தலே சிறந்தது.

# இராறு தோள்

**இலக்கண வித்தகர். இ. நமசிவாயதேசிகர்**

கந்தபுராணத்திலே மூவிருமுகங்கள் போற்றி என்றோர் அறுசீர் ஆசிரிய விருத்தம் வருகிறது. அதில் முதலாம் அடியில் நாலாம்சீர் முகம் பொழிஎன நிரையும் நிரையும் சேர்ந்த ஈரசைச் சீராய் அமைகிறது. அதற்கியைய இரண்டாம் அடியின் நாலாம் சீரும் நிரை நிரையாக அமையின் ஓசை சிறக்கும். அதனால் கச்சியப்பசுவாமிகள் அச்சீரை ஈராறுதோள் என்று அமையாது, செய்யுள் செய்யும்போது ஆசிரியன் வேண்டுமிடத்து நெட்டெழுத்தைக்குற்றெழுத்தாக்கலாம் (குறுக்கல்) என்ற உரிமையால் 'ஈ' என்ற எழுத்தை 'இ' ஆகக் குறுக்கி இராறு தோள் என நிரைநிரைச்சீராக அமைத்தனர்.

அச்செய்யுளைப்பாடுவோர் சிலர் இராறுதோள் என்பதைப் பிழையென்று கருதிப்போலும் ஈராறுதோள் என்றேபாடுகிறார்கள். அவர்கள் ஈராறுதோள் என்று பாடுகையில் ஓசை நீண்டுபோதலாலே ஈராறு என ஒருசீர்கொண்டு, தோள் என்பதைவேறு பிரித்து, அதுதனியசையாதலின் அதற்கு கள் என்ற விகுதிகொடுத்துத் தோள்கள் என ஈரசைச்சீர் ஆக்குகின்றனர். அதனால் தோள்கள் என்பது ஐந்தாம் சீராக, அடுத்துவரும் போற்றி என்ற சீரோடு அவ்வடி நிறைவுறுகின்றது. இறுதியில் நின்ற காஞ்சி என்பது அங்கும் சேராமல் இங்கும் சேராமல், நிற்க எப்படியோ சமாளித்துப்பாடி முடிக்கின்றனர். அதனை இராறுதோள், போற்றி காஞ்சி என்று பாடுவதேதக்கது.

மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
இராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

இது போலவே " பரமனைமதித்திடா' என்ற புராணப்பாவில் மூன்றாம் அடியின் கடைசிச்சீரைத் 'தண்டமும்' என்று பிழையாகப்பாடுவோரும் உண்டு. ஒரு தலைகிள்ளலும், குருதியும் அகந்தையம் கொளலும் தண்டங்களாகப் பின்னும் தண்டமும் புரிதரு வடுகன் என்னல் ஆகாது. ஆகுமேல், முற்கூறிய இரண்டும்தண்டங்கள் ஆகா என ஆகும். ஆதலின் 'தண்டமுன் புரிதருவடுகன்' என்று பாடங்கொள்ளுவதே தக்கது.

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

# சேக்கிழார் காட்டுஞ் சைவநீதி

பண்டிதர் மு. கந்தையா

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வரலாற்றில் ஒரு செய்தி. அவர் மதுரையிற் சமணரைவாதில்வென்றதும், அவர் முன்னிலையிற் சமணர் கழுவேற்றப்பட்டதுமே அச்செய்தி. இன்றைய புத்தி ஜீவிகளாகிய ஆய்வாளர்கள் பலர் இதன் யதார்த்தத்தைப் பெரிதுஞ் சந்தேகிப்பதுண்டு. சமீபத்திற் பெரியபுராண ஆராய்ச்சிப் பேருரை வெளியிட்ட உயர் பேறிஞர் ஒருவர், திருஞானசம்பந்தர் சமணர்களை வாதிட்டு வென்ற தென்ற செய்தி சைவ தொன்மைக்குப் பேரிழப்பாயிற்றென்று சுட்டியுள்ளார். எண்ணாயிரஞ் சமணர் ஒரே தடவையிற் கழுவேற, நாயனார் அதில் தலையிட்டுத் தடுத்துத் தமது ஜீவ காருண்யப் பிரபாவத்தினால் அவர்கள் உயிர்களைக் காப்பாற்றா தொழிந்தமை நீதியாகுமா எனக் கடவுவாரும் ஒருவர் போற் பலர். இவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தும் பொருட்டு நாவலர் மாணவரான காசி வாசி , செந்தி நாதையர் அவர்கள், சீகாழிப் பெருவாழ்வின் சீவகாருண்யமகிமை என்ற பெயரில் தனிநூலொன்று வெளியிட்டுள்ளதும் உண்டு. இந்நாளில் எழுதிச் சேர்க்கப்பட்டுச் சமீபத்தில் பிரசுரமாயுள்ள மலேசியப் பெரியபுராணப் பதிப்பிலும் இவ் வாசங்கையின் பொருந்தாமை போராற்றால் விடுவித்திருக்குமாறு காணத்தகும். அதனை இன்னு மோர் கோணத்தில் அணுகுதல் சாலும்.

மக்கள் ஒவ்வொருவருக்கும் இன்றிய மையாதது சமயம். ஆனால் அவரவர் ஆத்மிகத் தகுதியையும் தரத்தையும் பொறுத்தே அமைய வேண்டுவது சமயமாதலால் எல்லார்க்கும் ஒரே சமயம் பொருந்துவதாயில்லை. அதனால், மனித சமூகத்திற் சமயங்கள் பலவாயின. அவ்வப் பிரிவினர் தத்தம் ஆத்மிகத்தரத்துக்குந் தகுதிக்குமேற்க மெய்ப்பொரு ளுணர்வில் படிப்படியாக முன்னேறி வரச் செய்யுங் கருணையால் இறைவனால் எப்பவோ செய்து முடிக்கப்பட்ட காரியம் அது.

அவரவர் ஆன்மிகத் தரநிலை பற்றி அவரவருமறியார்; அயலவருமறியார். அவரவர்க்கு உள்ளுயிராயிருக்கும் இறைவனே யறிவான். இறைவனை அறிந்து இறைவனருளால் மெய்ஞ்ஞானிகளாயிருக்கும் மேலோர்களும் அவனருளால் அறிவர். இது காலங்கண்ட வேதாகம ஞானமுடிபு. ஆதலின் எல்லாச் சமயமும் இருப்பது நீதி. அவ்வச் சமய நெறிப்பாடுகளைத் தத்தமக் கியலும் வகையால் அனுட்டிப்பதும் நீதி. அப்படி அவ்வச்சமயத்தார் மேற்கொள்ளும் அநுட்டா னந்துக்கு மற்றெச் சமயத்தாராயினும் இடைஞ்சல் பண்ணாதிருக்க வேண்டுவதும் நீதி. இதுவும் வேதாகம சம்மதமான உண்மையே. அஃதிருக்க,

திருஞான சம்பந்தர் சம்பந்தப்பட்ட சமணர்விஷயத்தில் அவர்கள் நிலை இதற்கு நேர்மாறு. தமது சமயத்துக்கான அடக்கத்தின் எல்லைமீறி அன்றைய பாண்டிநாட்டுப் பாரம்பரிய பண்பாடான சைவத்தில் ஊடுருவித் தமது தந்திரோபாயங்களாற் சைவர்கள் தம் மியல்பான சமயாநுட்டானங்களுக்கு இடையூறு விளைத் தார்கள். சைவ ஒழுக்கப் பண்பாடுகளை நிந்தித்தார்கள் வெகு தந்திரமாகச் சைவ மன்னனாயிருந்த பாண்டியனையுந் தமது மந்திர மாயா வித்தைகளால் மயக்கி அவனுக்கும் மேலாளர்களாகத் தம்நிலைமையை உயர்த்திக் கொண்டார்கள். அவ்வலுவால் சைவால யங்களுக்கும் சைவ மடங்களுக்கும் எதிர்டாகத் தமது பள்ளிகளையும் பாழிகளையு மெழுப்பிப் பாண்டிநாட்டுமக்கள் இனிமேல் தாங்கள் சமணராயிருந்தாலன்றி வாழ முடியாது என்றெண் ணுமளவுக்கு அவர்கள் சமய சுதந்தரத்துக்கு முட்டுக் கட்டை இட்டிருந்தார்கள். இஃதிருக்க,

மக்களின் ஆத்மிகத்தர வேறுபாடு பற்றி இறைவன் சமயங்களைப் பலபடவகுத்தது அவ்வச் சமயத்தார் அவ்வச் சமயத்தோடேயே நின்று அதிலேயே சமைந்துவிட வேண்டும் மென்பதற்கன்று. அவ்வச்சமய பரம்பரையில் வருவோர் அவ்வவற்றுக்குரிய நடைமுறையொழுங்குகளை வழுவாமற் பின்பற்றி, அதனால் விளையும் ஆத்மிகநல உயர்வு மூலம் தம் சமயநிலைக்கு மேற்பட்ட சமயங்களிற் படிப்படியாக முன்னேறி ஒவ்வொருவரும் சமய இலட்சியத்தின் இறுதி முடிவாகிய மோட்சமெனும் ஆத்மானந்த அனுபவத்தைப்பெறவைத்தல் என்பது சைவ சமயஞ்சார்ந்தசாத்திர நூல்கள் தோத்திர நூல்கள்

எல்லாவற்றுக்கும் ஒத்தமுடிபு. அவ்வகையான ஒரு இறதிப் பேற்றுக்கு உபகரிக்கும் அநுகூலப் பண்புகள் அனைத்தும் அமைந்தசமயம் சைவ சமயம் என்பதும், அங்ஙனமே அதற்கு அத்தகைமையிருத்தல் ஆரும் அறிந்த உணர்வு பூர்வமாக ஒப்புக்கொள்ளக் கூடியநியாயரீதியான விளக்கச் செழிப்பும் அச்சமயத்திற் கன்றி மற்றெச்சமயத்துக்கும் இருப்பதாக நியாயபூர்வமாக நிரூபிக்கப்பட்டதாக வரலாறு கிடையாது. அதாவது,

சமய இலட்சியப் பேறான ஆனந்தம் என்பது ஒரு அநுபவம். அதைப்பெறுபவர் ஆர்? அதைக்கொடுப்பவர் ஆர்? எடுத்த வாக்கிலேயே அது பெறப்படாமல் இழுபட்டுக்கொண்டிருக்க வந்ததெதனால். அதன்சுவரூபம் என்ன? பிறகு அக்காரணம்விட்டுக் கொடுப்பது எங்ஙனம்?– ஆன்மாமுத்தியின்பம் பெறுவது என்றதன் சார்பில் குறித்த இவ்வளவுக்கும் சந்தேக விபரீதத்துக் கிடமில்லாமற்பதிலளிக்க எந்தச் சமயம் லாயக்குள்ளதாய் இருக்கிறதோ அதுவே உண்மையில் முத்தியின்பம் அளிக்குஞ்சமயம் என்பதை ஆரும் அல்லத் தட்டமுடியாது. பல்லாயிர ஆண்டுக்கணக்கில் நிலை பெற்று வந்து கொண்டிருக்கும் சமயஞான பாரம் பரியத்திற் சைவந்தவிர மற்றெச்சமயத்துக்கும் இத்திட்பம் அமையவில்லை. அமைந்துளதாகநிரூபித்தார் எவருமே இல்லை.

எனவே, சுருங்கச் சொல்வதாயின் சமயங்களைப்பலவாகப்படைத்த இறைவன் நோக்கம் அவ்வச்சமயத்தார் அனைவரும் தத்தம் சமய உண்மைப்படி ஒழுகிப்படிப்படியாக ஆன்மஈடேற்றம் பெற்றுயர்ந்து முடிவில் முத்தியின்பப் பேற்றுக்குப் பூரணஉத்தரவாதமளிக்கும் உண்மை விளக்கத்தோடு கூடிய சைவமயஞ்சார்ந்து உய்வுற வேண்டும் என்பதே. இஃதிங்ஙனமாக,

குறித்த சமணர் போக்கு இதற்கு மறுதலையானது. இறைவன் நோக்கையே மறுதலிப்பது. சைவசமயிகள் நலனுக்குமட்டுமல்ல, மேற்கண்ட இறைவன் நோக்குக்கிணங்க அவர்களின் ஆத்ம ஈடேற்றநலத்துக்குமே குந்தகமானது எனல் சொல்லாமேயமையும்.

நீதி விவகாரம் உலகநடையில் உள்ளது வேறு சமய நெறியில் அமைந்ததுவேறு. இறைவன் நோக்குக்கு உகந்ததெதுவோ அதுவே சமயத்தில் நீதி.

# கோளறு பதிகம்

**திருச்சிற்றம்பலம்**

வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கைமுடி மேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொடாமை யிவைமார்பிலங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்தவதனால்
ஒன்பதொ டொன் றொடேழு பதினெட்டொடாறும்
உடனாய நாள்கள வைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே

உருவளர் பவளமேனி யொழிநீறணிந்து
உமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே

மதிநுதன் மங்கையோடு வடபாலிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேலணிந்தென்

உளமேபுகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களானபலவும்
அதிகுண நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே
நஞ்சணி கண்டனெந்தை மடவாள்தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சினவ வுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூதமவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

வாள்வரி யதளதாடை வரிகோவணத்தர்
மடவா டனோடுமுடனாய்
நாள் மலர்வன்னி கொன்றை நதிசூடிவந்தென்
உளமேபுகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமொடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

செப்பிள முலைநன் மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையானபித்தும்
வினையானவந்து நலியா
அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாடனோடு முடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடிவந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்றனோடு
மிடரானவந்து நலியா
ஆழ்கடனல்ல நல்ல வவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள் பரமன்
சலமகளோ டெருக்கு முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடுதேவர்
வருகாலமான பலவும்
அலைகடல் மேருநல்ல வவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாயவேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்குமண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம் பொனெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரைவந்து
நலியாதவண்ண முரைசெய்
ஆனசொல் மாலை யோதுமடியார்கள்
வானில் அரசாள்வ ராணை நமதே

**திருச்சிற்றம்பலம்**

# சிவஞானபோதம் – அமைப்பும் சிறப்பும்

ஞானப்பிரகாசசிவம் மெய்கண்டார் ஆதீனம்

சைவம் என்னும் சஞ்சிகை சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தின் வெளியீடு. அதிலே மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதத்திற்கு எளிய இனிய உரையொன்று வெளிவந்தது. அதனை நூலாக்கிய பதிப்பாசிரியர், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள். 1956இல் அந்நூல் வெளிவந்தது.

"அகில உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் மூன்று பகுதிக்குள் அடங்கிவிடும்.

1. தானே அறிகின்ற பொருள் பதி. (தொல்பதி)
2. அறிவிக்க அறிகின்ற பொருள் பசு. (உயிர்த்தொகை)
3. அறிவித்தாலும் அறியாத பொருள் பாசம். (தளை)

இம் முப்பொருள்களைப் பற்றி அறிவது அறிஞர்களுடைய தலையாயகடமை. பாசத்தை நீக்கிப் பசு, பரமபதியை அடைந்திடல் வேண்டும்.

சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறைஎலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி. ஆர்உயிர்த் தொகை
வான்திகழ் தளை என வகுப்பர் அன்னவே

கந்தபுராணம்

சுருங்கக் கூறி விளங்க வைத்தல் தனிச் சிறப்புடைய அழகாகும். பொது நூல்களிற் சுருங்கிய சொற்களில் விரிந்த பொருளை விளக்குவது திருக்குறள்.

சிறப்பு நூல்களில் சுருங்கிய சொற்களால் எல்லாக்கருத்துக்களையும் விளக்கும் உண்மை நூல் சிவஞானபோதம். சூத்திரம் 12; வரி 40; சொற்கள் 216; எழுத்துக்கள் 624; வாசிக்கவும் நேசிக்கவும் பூசிக்கவும் தகுதியுள்ள ஞானநூல் சிவஞானபோதம். இதற்கு நிகரான நூல் முன்னுமில்லை, பின்னுமில்லை.

இமய மலையிலும் உயர்ந்த அறிவுக் கருவூலமான நூல். இதனை ஓதுவோர் எல்லா நலன்களையும் அடைவர். பாச நீக்கம் பெற்று முத்தி நலம் பெறுவர். மாதவஞ் செய்த தமிழ் நாட்டினர்க்குப் பெருவாய்ப்பாக அமைந்த அருமை நூல். மாதவச் சிவஞானயோகிகள் சிற்றுரை, பேருரை என இரு உரைகளை இந் நூலுக்கு இயற்றியருளினார். இவ்வாறு பதிப்பாசிரியரின் முன்னுரை பகர்கின்றது. புத்துரை கண்ட உரையாசிரியர் பின்வருமாறு சிவஞானபோதம் பற்றி விளக்கியுள்ளார்.

சிவஞானபோதம் என்பது சிவத்தை அறிதற்குக் கருவியாக உள்ள சுத்த அத்துவித சித்தாந்த சைவ ஞானப்பெருநூல். சிவம் ஆவது நித்த முத்த சுத்த சித்தாகிய ஒரு பொருள். ஞானம் ஆவது அப்பொருளைச் சந்தேக விபரீதம் இன்றி அதன் அருள் வழிப்பட்டு நின்று உள்ளவாறு அறிதல். போதம் ஆவது அவ்வாறு ஆகம அளவையால் அறிந்த அப்பொருளை அநுபூதி – அநுபவ – நிலையில் வைத்து நிச்சயஞ் செய்தல்.

ஆகவே, சிவஞானபோதம் பதி பசு பாசங்களின் இலக்கணங்களை எல்லாம், பெரியமலையின் உருவத்தை ஒரு சிறிய கண்ணாடி தன்னுள் அடக்கிக் காட்டுவது போல், பன்னிரண்டு சூத்திர ரூபமாய் இருக்கும் தன் இடத்தில் அடக்கிக் கூறுவதும், சகல வேத ஆகம சாரமாய் இருப்பதும் எல்லா ஞான நூல்களுக்கும் தாய்நூலாய் இருப்பதுமான ஒப்பற்ற ஞான சாத்திரமாம்.

வேதம் பசுஅதன்பால் மெய்ஆகமம் நால்வர்
ஓதும் தமிழ்அதனின் உள்உறுநெய் – போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்

வேதம் பொது. அது பசுவைப் போன்றது. ஆகமங்கள் சிறப்பு. அவை பசுவின் பால் போன்றவை. தேவார திருவாசகங்கள் பாலின் இடத்துப் பொருந்தி உள்ள நெய்யைப் போன்றவை சிவஞான போதம் நெய்யின் சுவையை ஒத்தது.

வடமொழிச் சிவஞானபோதம் சிவபெருமானால் ஆகமத்தில் அருளிச் செய்யப்பட்டது. தமிழ்ச் சிவஞானபோதம் உலகம் உய்யப்பூர்வ ஞானத்தோடே திருவெண்ணெய் நல்லூரில் திருவவதாரஞ் செய்து, குழந்தைப்

> **நமஸ்காரம் பண்ணலாகாத வேளைகள்:**
>
> அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்திலே பிரதட்சிணம் நமஸ்காரம் முதலானவை பண்ணலாகாது.
>
> -நாவலர்.

பருவத்திலேயே கைலாசவாசி ஆகிய பரஞ்சோதி மாமுனிவரால் ஞான உபதேசஞ் செய்யப்பெற்று, அத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சுயம்பு மூர்த்தி ஆகிய பொல்லாப் பிள்ளையார் என்னும் விநாயகக்கடவுளிடம் சகல வேத ஆகம உண்மைகளையும் வடமொழியில் எல்லாம் வல்ல இறைவனார் பன்னிரண்டு சூத்திரங்களில் அடக்கி அருளியது போலவே, தமிழ் மொழியில் நமது மெய்கண்ட தேவரும் பன்னிரண்டு சூத்திரங்களில் அடக்கிக் கூறி அருளினர் எனில் மெய்கண்டதேவரை அவ்விறைவர் என்றே கூறுவதன்றி வேறுயார் என்று கூறுவது? இவ்வாறு உரையாசிரியர் கூறியுள்ளார்.

மெய்கண்டார் சிவஞானபோதத்திற்கு இருவகையான உரை தந்துள்ளார் என்பதும் மனங்கொள்ளத்தக்கது. முதலாவது உரை கருத்துரை எனப்படுகின்றது. மற்றது வார்த்திகப் பொழிப்புரை.

முதற்சூத்திரம்

அவன் அவள் அது எனும் அவை
மூவினைமையின'
தோற்றியதிதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

இதன் கருத்துரை

என்நுதலிற்றோ எனின் சங்கார
காரணனாய் உள்ள முதலையே முதலாக உடையது
இவ்வுலகம் என்பது உணர்த்துதல் நுதலிற்று
(நுதலிற்று – கருதியது)

பொழிப்புரையை உரைத்துக்கொள்க எனக்கூறிய மெய்கண்டதேவர் இரண்டாவது உரையாகிய வார்த்திகப் பொழிப்புரையைத் தருகின்றார்.

அவ்வுரை சூத்திரத்தை அதிகரணங்களாக முதலில் பிரித்து மேற்கோள், ஏது உதாரணம் என்பவறைத் தந்து விளக்குகின்றது.

மேற்கோள், ஏது, இரண்டும் வசனநடையிலுள்ளன. உதாரணம் வெண்பா யாப்பில் உள்ளது.

இவ்வாறு சிவஞானபோதம் 12 சூத்திரங்களும் 39 அதிகரணங்களாகி 39 மேற்கோள் ஏதுக்களைப் பெற்றுள்ளன. உதாரண வெண்பாக்கள் அவையடக்கம் உட்பட 82. மங்கல வாழ்த்து ஒன்று இவை மெய்கண்டார் அருளியவை. இவற்றை விட 39 அதிகரணத்திற்கும் 39 சூர்ணிகள் உள.

முதற் சூத்திர முதல் அதிகரணம் அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் இதற்குரிய மேற்கோள் : உளதாய் ஒருவன், ஒருத்தி, ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் (உலகம்) உற்பத்தி திதி நாசம் உடைத்து.

ஏது தோற்றமும் ஈறும் உள்ளதன் பாலேகிடத்தலின் மேற்காட்டியுள்ள ஏதுவை முதலிலும் மேற்கோளை இரண்டாவதாகவும் பொருத்தி வாசித்தால் நல்லதோர் வசனம் வரும்.

தோற்றமும் ஈறும் உள்ளதன் பாலே கிடத்தலின், உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசம் உடைத்து என வசனம் வரும்

சூர்ணி மேற்காட்டிய கருத்தினைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறுகின்றது. சகம் பிறப்பு இருப்பு இறப்பு ஆகிய முத்தொழிலை உடையது. இக்கால வசனத்தில் நாம் கூறும் பொழுது, இந்த உலகம் பிறத்தல், இருத்தல், இறத்தல் ஆகிய மூன்று வகையான தொழில்களை உடையதாக இருக்கின்றது என்போம்

முதற் சூத்திரம் 3 அதிகரணங்களை உடையது. முதற்சூத்திர முதல் அதிகரண உதாரண வெண்பா ஒன்று. இரண்டாம் அதிகரண உதாரண வெண்பா மூன்று. மூன்றாம் அதிகரண உதாரண வெண்பா ஒன்று.

சிவஞானபோதத்திற்கு மேற்காட்டியவாறு மெய்கண்டார் இருவகையான உரைதந்துள்ளார். இவையாவற்றிற்கும் பின்வந்தவர்கள் உரை கண்டுள்ளனர்.

சிவஞான போதத்தின் வழிநூல் சிவஞானசித்தியார். சித்தியார் சுபக்கம் செய்யுள் நடையிலுள்ள சிவஞானபோத உரை எனலாம். சித்தியார் சுபக்கத்திற்குப் பழைய காலத்தில் அறுவர் உரை கண்டனர். திருவிளங்கதேசிகர் உரை இந்நூற்றாண்டில் எழுதப்பெற்றது. வசன நடையில் சித்தியார் சுபக்கம் எழுதியோர் பலருள் குறிப்பிடத்தக்கவர் வணக்கத்திற்குரிய க.சா. முருகேசுப் போதகர். வினா விடையாக எழுதியவர் இலங்கையில் மெய்கண்டார் ஆதீனத்தைத் தாபித்த சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

சிவஞானபோத முதல் உதாரண வெண்பா "பேதாய்" என விளிக்கின்றது. "சிவம்" என்னும் அந்ததர என்பது ஈற்றில் உளது. "அத்துவித அன்பிற் தொழு" என்பதும் ஈற்று அதிகரண உதாரண வெண்பாப் பகுதியாகும். மெய்கண்டார் கண்டு காட்டிய அத்து விதமாதல் அத்துவிதி நிலை பற்றித்தாயுமானவர் பின்வருமாறு கூறுகின்றார். "பொய்கண்டார் காணப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டநாதனருள் மேவு நாள் எந்நாளோ"

# நரசிங்கமுனையரைய நாயனார்

சிவ. சண்முகவடிவேல்

நரசிங்க முனையரையர் திருமுனைப்பாடி நாட்டிற்கு அரசராக விளங்கியவர். அவர் தம் குல மரபிற்கு ஏற்ப அறநெறியில் அரசு நடத்தி வந்தார். திருமுனைப்பாடி நாடு செல்வத்திற் செழித்திருந்தது. "அறந்தருநாவுக்கரசு மாலால சுந்தரரும் பிறந்தருள் வுளதானாற்" செல்வப் பெருக்கத்திற்குக் குறை வுளதாமோ? நரசிங்க முனையரையர் செல்வத்தில் ஏம்பலித்துவிடவில்லை. அவர் சிவபெருமானின் திருவடையாளமான திருநீற்றையே பெறுதற்கரிய செல்வமாக மனத்திற் பேணினார்.

நரசிங்க முனையரையர் பல போர்முனைகளை வெற்றி கண்டவர். தீய நெறிகளை அணுகவிடாது அகற்றியவர். முப்புரங்களை முனிந்த மூவிலைச் சூல முதற்படை யாருக்குத் தொண்டு புரிவதையே மேலாகக் கருதினார். அப்பெருமானுடைய திருவடிப் பேறு பெறுதலே குறிக்கோளாகக் கொண்டார்.

சிவபெருமான் எழுந்தருளி அமரும் திருக்கோவில்களுக்குச் செல்வார். அங்கு அருட்செல்வம் பெருக்கு நெறியில் அயராது முயல்வார். தொண்டு நெறி புரிவதற்குத் தடைகள் எதிர்வரின் தகர்த்து எறிவார். அக்கு மணியும் ஆமையின் ஓடும் அணியும் ஆதியாருக்கு ஆற்றும் வழித்தொண்டிற்கு அளவு ஏது? கனவிலும் கூடக் கைத்தொண்டு கைவிடாது காப்பவர்.

திருவாதிரை நாள் தோறும் சிவபெருமானுக்குச் சிறப்பான வழிபாடு நிகழ்த்துபவர் நரசிங்கமுனையரையர். விளக்கமான பூசனை புரிந்த பின்பு நீறணியும் தொண்டர் வந்தவர்களை எல்லாம் பேணிக் கொண்டாடுவர். நூறுபசும் பொன் குறையாமற் கொடுப்பார். அவர்கள் இனிய திருவமுதும் அருத்துவார்.

ஆறணிந்த சடை முடியார்க் காதிரைநா டொறுமென்றும்
வேறுநிறை வழிபாடு விளங்கியபூ சனைமேவி
நீறணியும் தொண்டரணைந் தார்க்கெல்லா நிகழ்பசும்பொன்
நூறுகுறை யாமலளித் தின்னமுது நுகர்விப்பார்.

இவ்வாறு சேக்கிழார் பெருமான், நரசிங்க முனையரையரின் சிவ அன்பைச் சீர்கூட்டிப் பாடுவார்.

வழமை போல நரசிங்கமுனையரையர் ஒரு திருவாதிரை நாளில் தொண்டு புரிவார், மேன்மை நெறித் தொண்டர்க்கு விளங்கிய பசும் பொன் பகிர்ந்தளித்தார். எதிர்பாராத விதமாக நீறணிந்த ஒருவர் வருகை தந்தார். மானமழி தன்மையராகக் காணப்பட்டார். காமக்குறி மலரும் தன்மையாக இருந்தது அவர்காட்சி. அவரின் மானமழி தன்மை மற்றவர்களை மனம் மயங்க வைத்தது.

அவருடைய ஊனவடிவத்தைக் கண்டு ஏனையவர்கள் எள்ளி நகைத்தார்கள். ஒரு புறமாக ஒதுங்கிக் கொண்டார்கள்.

அது கண்ட நரசிங்கமுனையரையர் ஊன நிகழ் மேனியர் எதிரே சென்றார். அவரைக் கைகூப்பிக் கும்பிட்டார். அவரை மிகவும் மகிழ்ந்து உபசரித்தார். மனங்குளிர இனிய மொழிகள் கூறினார். அன்போடு ஆதரித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் திருநாவுக்கரசு நாயனாரின் திருவாக்கு ஒன்று சிந்திக்கத் தக்கது.

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
　　திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
　　வுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
　　இரண்டாட்டா தொழிந்தீசர் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
　　கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

அதே போலக் குலச்சிறை நாயனார் புராணத் திருப்பாட்டும் பொருந்துவதை ஒப்பு நோக்கி இன்புறுக.

உலகர் கொள்ளு நலத்தின ராயினும்
　　அலகி றீமைய ராயினும் மம்புலி
இலகு செஞ்சடை யாரடி யாரெனில்
　　தலமு றப்பணிந் தேத்துந் தகைமையார்

ஒழுக்கமில்லாதவரானாலும் திருநீற்றினை அணிந்த அடியவர்களை இகழ்ந்து உரைத்தல் தகாது. என்று அவர்கள் நரகத்தில் வீழாது காத்தார் நரசிங்க முனையரையர். ஊன மேனியருக்கு இரட்டி மடங்கு இருநூறு பசும் பொன் கொடுத்தார். அந்தப் பெரியவரை வழிபட்டார். இனிய வார்த்தைகளை மொழிந்தார். அவர் செல்வதற்கு விடை தந்தார் நரசிங்கமுனையரைய நாயனார்.

இவ்வாறாகத் திருத்தொண்டின் நெறிநின்றார். அருமை நெறியில் நின்று தொண்டு புரிந்தார். எல்லாத் திருவாதிரை நாளும் செவ்விய அன்பினில் ஆற்றினார். சித்தமலம் நீங்கினார். சிந்தை தெளிந்தவரானார்.

நச்சுப்பை பொருந்திய ஒளியுடைய நாகத்தை ஆபரணமாக அணிந்த சிவபெருமானுடைய பாதமலர் நீழல் சேரப்பெற்றார். மெய்வழி அன்பில் பேரின்பம் ஆர்ந்தார். மீண்டும் பிறவியில் புகாநிலை பெற்றார் நரசிங்க முனையரைய நாயனார்.

# பயில்வோர் பயிற்சிக்கு — 4

**மாதினி**

1. பஞ்ச தோத்திரங்கள் எவை?
2. திருமுறைகளில் விளக்கப்பட்டுள்ள தத்துவக்கருத்து எது?
3. அடங்கன் முறை எனப்படுவது எது?
4. தேவார முதலிகள் யார் ?
5. "பண்ணும் பதமேழும்" என்னும் தேவாரம் பாடப்பட்ட தலம் எது?
6. திருத்தாண்டகம் பாடியவர் யார்?
7. பதினோராம் திருமுறையில் அடங்கும் பிரபந் தங்கள் எத்தனை?
8. திருக்கோவையார் பாடியவர் யார்?
9. "மாதர்ப் பிறைக்கண்ணியானை" என்னும் திருப்பதிகம் பாடப்பட்ட திருத்தலம் எது?
10. "பெருகலாந்தவம்" என்னும் பாடலைப் பாடி யவர் யார்?
11. திருவெம்பாவை எத்தனையாம் திருமுறை யில் அடங்குகின்றது?
12. தில்லையிற் சேற்றில் அழுந்திய தேரைத் திரும்பவும்ஓடச் செய்வதற்குச் சேந்தனார் பாடிய பாடல் எது?
13. திருமந்திரத்தில் உள்ள திருப்பாடல்கள் எத்தனை?
14. திருமந்திரத்திற்கு வழங்கும் வேறொரு பெயர் தருக.
15. திருத்தொண்டர் புராணம் என அழைக்க ப்படும் நூல் எது?
16. திருத்தொண்டத் தொகையைப் பாடியவர் யார்?
17. தில்லைக் காட்சியைக் கண்ட சுந்தரர் இறைவனைப் புகழ்ந்து பாடிய பாடல் எது?
18. திருக்கோத்தும்பி பாடியவர் யார்?
19. சம்பந்தர் பாடிய திருகோணமலைத் திருப் பதிகம்எத்தனையாம் திருமுறையில் அடங் குகின்றது?
20. சுந்தரர் பாடிய தேவாரங்கள் எத்தனையாம் திருமுறையில் அடங்கும் ?

**வாசகர் கவனிக்க**

சைவநீதி ஈசுர ஆவணி இதழின் 24 ஆம் பக்கத்திற் பதிவாகியுள்ள அட்டவணைத் தொடரெண் 38இல், திருப்புலம்பல் என்றிருப் பதைத் திருவேசறவு என்று திருத்திக்கொள்க.

—ஆசிரியர்

**வாசகர் கவனிக்க**

சைவநீதி ஈசுர ஆவணி இதழின் ஒன்பதாவது பக்கத்துள்ள கட்டுரையின் நான்காவது பந்தியின் இறுதி வசனத்தில் 'மட்டுமே' என்றிருக்குஞ் சொல்லைத் தவிர்த்துக்கொள்க.

—ஆசிரியர்

# மும்மலகாரியம்

**சைவப்புலவர் அ. இரத்தினம்**

எந்த ஒரு மனத்தினாலும் எண்ணமுடியாத பரப்பளவைக் கொண்ட இந்த அண்டவெளியிலே உள்ள ஒரு சிறிய பூமியிலே நாங்கள் வாழுகிறோம். எமக்கு ஒளிதரும் சூரியன் நாம் வாழும் இந்தப் பூமியைவிடப் பதின்மூன்று இலட்சம் மடங்கு பெரியது. இந்தச் சூரியனைவிட நினைக்கமுடியாதளவு பெரிய, கணக்கற்ற சூரியர்கள் ஆகாயவெளியிலே விளங்குகின்றனர். சின்னஞ் சிறிய தோற்றங்களுடன், குவிக்கப்பட்ட முல்லைப் பூக்களோ என்று எண்ணக்கூடியதாக நம் கண்ணுக்குக் காட்சியளிக்கும் நட்சத்திரக் கூட்டங்களின் கோலக்காட்சிகள் பல்வேறு சூரியர்களின் எழில்மிகு தோற்றங்களென்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

"உணர்ந்து கொள்ள வேண்டும்" என்னும் தொடர் நமது சிந்தனையைத் துலங்கவைப்பதாக அமைகின்றது. இந்தப் பூமி, இதற்கு ஒளிதருஞ் சூரியன், காணும் விண்மீன்கள், மாடமாளிகைகள், உடுக்கும் உடைவகைகள், மனைவி, மக்கள், சுற்றம் எல்லாம் நிலையானவை, நமக்குச் சொந்தமானவையென்று கருதும் உளப்பாங்கு நம்மெல்லோரையுமே பிடித்துள்ளதை நாம் அறிவோம். நிலையானவை என்று நம்எண்ணத்திற்பட்ட உலகியற் பொருள்கள்பல, எங்கள் கண்முன்னேயே அழிந்துபடுகின்றன. வானவெளியிற் சஞ்சரிக்கும் கோள்களிற் சிலகூட, ஏன் பல என்று சொன்னாலும் பிழையாகாது; நாளும் அழிந்துபடுவதை நம் கண்கூடாகக் காணுகின்றோம். இவ்வண்ணம் நிலையில்லாதனவாகிய பொருள்களை நிலையானவையென்று மாறி உணரவைக்கின்ற ஏதோவொரு நிலைமை இருப்பதாகச் சிந்திக்கவேண்டியுளது. சாதாரண உலகியல் வாழ்க்கையில் "பேயொன்று நிலை" என்று ஒன்று இடம்பெறுவதாக அறிகிறோம். அந்நிலைமைக்குள்ளாய ஒருவர் இந்த உலகியலிலே மாறிக் காண்கின்ற பாங்கினைக் காண்கின்றோம். தன்னுடன் உரையாடுவதற்குப் பக்கத்தில் யாரும் இல்லாத வேளையிலுங்கூட யாரோ ஒருவர் இருப்பது போல உணர்ந்து அவர்பேசுவதை நாம் காணுகிறோம். இந்த வகை அவர்களின் பல்வேறு தொழிற்பாடுகளையும் நாம் காண வாய்ப்புக்கிடைக்கிறது. இது பேய்பிடித்தவர்கள் பற்றியது. பேய்பிடித்தவர்களைப் பற்றிப்பேசும் நாம் ஏதோ ஒன்றினால் மறைக்கப்பட்டிருக்கிறோமென்று சிற்சில சந்தர்ப்பங்களிற் சிந்திக்கக் கூடியதான ஒரு ஒளிக்கீறு தென்படுகின்றது. இல்லையேல் நிலையில்லாதனவாகிய இந்த உலகியலைப் பற்றி அவைதாம் சாஸ்வதம் என்று எண்ணுகின்ற மனப்பாங்கு எமக்கு இருக்கமுடியாது.

நமது கண்ணுக்குப் பாரியதாகத் தோற்றமளிக்கும் இந்தப்பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருக்கின்றது. அத்துடன் தன்னிலும் பன்மடங்குபெரியதாய சூரியனையும் சுற்றுகிறது. சந்திரன் என்னுஞ் சிறியதொரு கோள் பூமியைச் சுற்றுகிறது. இந்தப் பெரிய சூரியன்கூட அசைந்துகொண்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தப் பிரமாண்டமான பொருள்களின் இயக்கத்திற்கு மேலானதொரு சக்தி தேவையென்பதை எல்லாரும் ஏற்றுக்கொள்வர். அந்த மேலான வல்லமை கடவுள் என்ற பெயரிலே குறிக்கப்படும். அந்த மேலான வல்லமையின் ஒளிக்கீறுதான் நாம் காணும் பொருள்கள், நிலையற்றவையென்பதை உணர்த்துவது. அதை அவ்வண்ணம் உணரவிடாது தடை செய்து கொண்டிருப்பது பாசம் எனப்படுவது ஒரு பொருள்.

"பச்" என்னும் வடமொழித்தாது பந்தித்தல் – கட்டுதல் என்னும் பொருளைத் தருவதாயுள்ளது. ஆன்மாவைத் தன்வயப்படுத்தி உண்மை நிலையை மறைத்து உலகியலை உண்மையென நம்பச் செய்யுந்தன்மை இந்தப் பாசத்திற்குண்டு. இது மலம் என்ற சொல்லாலும் அழைக்கப்படும். இந்த மலமும் தொடக்கம் முடிவு இல்லாததொன்று என்று நமது உணர்வுக்குத் தெரிகின்றது. பிரபஞ்சத்தின் தோற்றம், நிலைபேறு, மறைவு தொடர்ந்து அதே நிகழ்வுகள், இந்த உணர்விற்கு ஊட்டமளிப்பனவாகின்றன. இந்தமலம் ஆணவம் என்றும் கன்மம் என்றும் மாயை என்றும் மூன்று பெரும்பிரிவிற் பேசப்படும். வியாபகமான ஆன்மாவை அணுத்தன்மை ஆக்குவதால் ஆணவம் என்னுங் காரணப் பெயர் உண்டாயிற்று, அணுத்தன்மைய தாக்குவதென்பது இழிந்த அறிவு, இழிந்த தொழில் என்பவற்றைப் பொருந்துமாறு செய்தலாம். ஆணவம் அநாதியானது. அது என்றும் ஆன்மாவுடனாயது. அது இடையே ஆன்மாவைப்பந்திப்பது என்ற எண்ணத்திற்கு இடமில்லாத வகையில் தொடக்கம் முடிபு இல்லாத ஆன்மாவுடன் தொடக்கம் முடிபு இல்லாமலே இருப்பது. ஆன்மா செய்கின்ற பாவங்களுக்கேற்ப இது இடையிலே ஆன்மாவுடனாயது என்று சொல்லலாமோவெனில் அது பொருந்தாது. ஏதாவது ஒரு காரணங்கொண்டு ஆணவம் ஆன்மாவை இடையிலே பற்றலாமென்று கொள்ளின் முத்தி நிலையினும் கூட ஆன்மாவைப் பற்றக் கூடிய வாய்ப்பு அதற்குக் கிடைத்துவிடும். முன்பு ஆணவ மலத்தோடு தொடர்பற்றிருந்த ஆன்மா இடையே

அதனோடு தொடர்புகொள்ளவேண்டி ஏற்பட்டது என்றால் அதற்கு ஏதாவதொரு காரணம் இருக்கவேண்டும். நல்ல செயற்பாடுகளை இயல்பாகவே பொருந்தியிருந்த ஒருவன் தீயசெயற்பாடுகளுக்கு உள்ளாக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுவதற்கு இடமில்லையென்று சொல்லலாம். அவ்வண்ணம் தீச்செயல்களின் பாற்பட அல்லது இழிசெயல்களின் பாற்பட ஒழுகும் நிலையொன்று வந்ததெனில் அங்கே ஆணவமலத்தின் சம்பந்தம் உண்டாகிவிட்டதெனக் கருதஇடமுண்டு. அத்தகைய இடமொன்று ஆன்மாவிற்கு எந்தவித காரணமுமின்றி ஏற்படுமெனில் ஆணவம் ஆன்மாவைத் தான்விரும்பும் எந்த நேரத்திலும் பற்றிக்கொள்ளலாம், என்னுங்கருத்து உண்டாகின்றது. அது சரியெனில் இறைவனுடனாய நிலையிலும்கூட இந்த ஆணவம் ஆன்மாவைப் பற்றிக்கொள்ள முடியும். அப்படியெனில் ஆன்மாவிற்குவிடுதலையே இல்லையென்ற கருத்து வலிவுபெறும். சாதாரணமான சிந்தனையை உடையவர்கள் கூட இது பொருத்தமற்றது என்று சொல்லக்கூடியதாக இருக்கின்ற காரணத்தினாலே ஆணவம் அநாதியானதுதான் என்று துணிய முடிகின்றது.

இதே ஆணவம் புறம்பானது அன்று என்றும் ஆன்மாவின் குணமாக உள்ளது என்றும் கொள்ளலாமோ என்னில் அது நம் கருத்திற்குப் பொருந்துவதாக இல்லை. காரணம் பிறப்பு இறப்பு முதலாய துன்பங்களுக்குக் காரணமாய் அமைந்தது ஆணவம் என்றும் அது திருவருளினாலே தேய்க்கப்படுகிறது என்றும் உணருகிறோம். ஆன்மாவின் குணமாகவே ஆணவம் இருக்குமென்று கண்டால், திருவருளால் ஆணவம் அழிக்கப்படும்வேளை அந்தப்பண்பினைப் பொருந்திய மூலப்பொருளாய ஆன்மாவும் அழிந்துபடவேண்டும்.

இனிப்பு என்று ஒரு பொருளுண்டு இனித்தலாகிய குணத்தை அதினின்று நீக்கிவிட்டபின்னர் அந்த இனித்தற் குணத்தைப் பொருந்திய முதற் பொருளாகிய இனிப்பு அங்கே அழிந்துபடாமல் இருக்கிறதென்று எந்தச் சின்னஞ்சிறிய குழந்தையும் சொல்லமாட்டாது. சுருக்கமாகச் சொன்னால் குணம் அழியும்பொழுது குணத்தையுடையதாய குணியும் அழிந்துபடும் என்பது பெறப்படுகின்றது. ஆனால் ஆணவம் அழிந்த நிலையில் ஆன்மா பிரகாசத்துடன் இருப்பதை அறியமுடிகின்ற காரணத்தினாலே ஆணவம் ஆன்மாவின் குணம் என்று சொல்லுவது பொருத்தமற்றது என்பது தெளிவாகிறது.

ஆன்மா உண்மைகளை உணரமுடியாதிருக்கும் நிலைக்கு காரணமாய் அமைந்த ஆணவம் இருளிலும்பார்க்கக் கொடியது என்று கூறுவது தவறாகாது. இருள் உலகியற்பொருள்களைத் தன்னகத்தே மறைத்துக்கொண்டு தன்னுடைய உருவத்தைக் காட்டுகின்றது. ஆனால் இந்த ஆணவமோ உண்மைப்பொருள்களை மறைக்கின்ற அதேவேளையில் தான்தான் அதைச்செய்கின்றேன் என்று காட்டாத திறமையையுங் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி ஒரே ஆணவம் பல ஆயிரக்கணக்கான ஆன்மாக்களைச் சார்ந்திருந்தும் ஒரு ஆன்மாவைப் பந்தித்திருக்கின்ற அதேவேளையில் மற்யை ஆன்மாக்களுடன் தான் சேர்ந்திருத்தலை அந்த ஆன்மாவுக்குக் காட்டாதிருக்கும் பெருந்திறனுடையதாய் இருக்கின்றது.

இங்கே ஒரு வீடு இருக்கிறது. இங்கே மரங்கள் நிற்கின்றன, இங்கே ஒரு கிணறு இருக்கின்றது, இங்கே மேடு இருக்கின்றது, இங்கே ஒரு பள்ளம் இருக்கின்றது, என்ற வேறுபாடின்றிக் கருமையாகிய தன் ஒரு உருவினுள்ளே எல்லாவற்றையும் அடக்கிக் காட்டுகின்ற இயல்பு இருளுக்குண்டு. அஃதேபோன்று பதி, பசு, பாசம் என்றும், இது உண்மைப்பொருள், இது பொய்ப்பொருள் என்றும், இது நிலையான பொருள் இது நிலையற்றபொருள் என்றும்,வேறுபடுத்திக் காணமுடியாத வகையில் மயக்கத்தை நிகழ்விப்பதொரு பொருள் உண்டு என்று சிந்திக்கமுடிகின்றது. அதுவே ஆணவம் என்னும் பெயரால் அழைக்கப்படுவது, இதனைப் பசுத்துவம், பசுக்காரம், மிருத்யு, மூர்ச்சா, கலானி, பாபமூலம், சஷ்டியம், என்னும் பெயர்களாலும் குறிப்பிடுவர். இது நல்லறிவை மயக்குதல் மோகம் என்றும், உலக இன்பங்களை மேலாகமதிக்கச் செய்தல் மதம் என்றும், உலக இன்பங்களில் ஆசையை உண்டாக்குதல் ராகம் என்றும், பற்றுள்ளவர்களிலிருந்து நீங்கவேண்டிய காலத்தில் உடம்பை மெலியச் செய்வது சேஷம் என்றும், ஆன்மா தன்னிலுள்ள குற்றங்களை கடவுளிலேற்றித் தன்னுடைய பெருமைகளை வியந்து அதிசயிக்கச் செய்வது வைசித்திரியம் என்றும், உலக இன்பங்களை அனுபவிக்கும் பொழுது ஆன்மா தனக்கொரு குறையுமில்லையென நினைக்கச்செய்வது அரிசம் என்றும் பேசப்படும்.

தோற்றியன யாவும் அழிந்துபடும் இயல்பின. ஆகவே தோற்றாதவைக்கு அழிவுங்கிடையாது. இறைவன் அநாதியானவன். ஆகவே முடியும் இல்லாதவன். ஆன்மாவும் ஆதியந்தம் இல்லாதது. அஃதேபோன்று ஆணவமும் தோற்றமோ முடிபோ இல்லாதது. அநாதியாகவே ஆன்மாவைப் பந்தித்துள்ள ஆணவம் ஆன்மாவின் மோட்சநிலையிலுங்கூட ஆன்மாவுடனேயே இருப்பது. ஆனால் அந்த நிலையில் அது தன்னியக்க மின்றிக் கேவலமாக நிற்கும்.

ஆன்மா அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவிக்கச் செய்து நல்ல நிலைக்கு இட்டுச்செல்லும் காரணத்தினால் ஆணவ மலமும் வேண்டப்படுவது ஒன்றுதான் என்று சொல்லவேண்டியுள்ளது.

ஆன்மாவினது பக்குவநிலைக்கு வழிப்படுத்தும் வகையில் திரோதானசத்தி தொழிற்படுகிறது. அது இச்சா ஞானா கிரியைகளாய் வியாபித்து, தனுகரணபுவன போகங்களை உண்டாக்கி அவற்றோடு ஆன்மாவைக் கூட்டிக் கன்மத்தை

அனுபவிக்கச்செய்து மலபரிபாகத்தை உண்டாக்குவது என்று ஞானிகள் சொல்லுகிறார்கள். தனு கரண புவன போகங்கள் உண்டாவதற்கு மாயை என்னும் மலம் அனுசரணையாகின்றது. அது சுத்தமாயை, அசுத்தமாயை என இரண்டுவகைப்படும். சுத்தமாயையின் காரியந்தான் அசுத்தமாயை என்று கொள்ளப்படுகிறது. மாயையும் அநாதியான பொருளென்று கொள்ளப்படுவதொன்று. மாயையின் பகுதியாகிய சுத்தமாயை குடிலை எனவும், விந்து எனவும் மகாமாயை எனவும் பெயர் பெறும். மலகர்மங்களோடு சேராது இருப்பது காரணமாகச் சுத்தமாயை எனப்படுகின்றது. சொல், பொருள் வடிவாகிய பிரபஞ்சங்கள் இச்சுத்த மாயையினின்றுந் தோன்றும். நாதம், விந்து, சாதாக்கியம், மகேஸ்வரம், சுத்தவித்தை என்னும் தத்துவங்களும் சாந்தியாதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவர்த்தி என்னும் பஞ்சகலைகளும் 224 புவனங்களும் சுத்த வித்தையினின்றுந் தோன்றும். கலை, தத்துவம், புவனம் என்னும் இம் மூன்றும் பொருட்பிரபஞ்சமாம். விந்துவிலிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குகளும் தோன்றும். எண்பத்தொரு பதங்களும் பதினொருமந்திரங்களும் தோன்றும். இந்த வாக்குகள், பதங்கள், மந்திரங்கள் என்பன சொற்பிரபஞ்சமாம்.

பிரபஞ்சமெல்லாந் தோன்றுதற்கும் தன்னிடம் வந்து ஒடுங்குதற்கும் காரணமாய் அமைந்தது மாயை, மாயா என்னும் வடமொழிச்சொல் தமிழில் மாயை எனப்படுகின்றது. மா என்பது ஒடுங்குதலையும், யா என்பது வருதலையுங் குறிக்கும். மாயை உயிர்களுக்குத் தனு, கரண, புவனபோகங்களைத் தருவது, கன்ம நிகழ்ச்சியின் பொருட்டாகும். கன்மம் இல்லையென்றால் தனு கரண போகங்களும் வேண்டப்படாதனவாகிவிடும். தனு கரண புவனபோகங்களை மெய்யென எண்ணச் செய்வது மாயை கன்ம மலத்தின் பொருட்டே இது எண்ணச் செய்வது. கன்ம மலம் இல்லையெனில் மாயையின் மயக்குந் தொழிலும் இல்லாது போய் விடும். ஆணவங் கன்மம் மாயை என்னும் மூன்றும் நெல்லினிடத்துள்ள உமியும் முளையும் தவிடும் போன்று ஆன்மாவோடு உடனாகியுள்ளனவென்று சிவப்பிரகாசத்தில் கூறப்படுகிது. கன்மம் ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாவது. பல விதமான போகங்களைத் தருவதாய் இருக்கும். இக்கன்மம் சஞ்சிதம் பிராரத்தம், ஆகாமியம் என்னும் வினைகளாகப் பகுத்தறியப்படும். ஆணவம் கன்மம், மாயை ஆய மலங்கள் ஆன்மாவைப் பக்குவஞ் செய்கின்ற நிலையில் உள்ளமை காரணமாக ஆன்மாவின் ஈடேற்றத்திற்கு உபகாரிகளாய் வேண்டப்படுவனவாய் அமைகின்றன.

# நொடித்தான்மலை உத்தமன்

**முருக வே பரமநாதன்**

மூவர் தமிழ் எனப் போற்றப்படும் தேவாரங்களை அருளிச்செய்தவர்கள் மூவர் முதலிகள். இவை ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. சுந்தரரால் அருளப்பட்டவைகளே ஏழாந் திருமுறைப் பாசுரங்கள். இதன் இறுதிப் பதிகம் நொடித்தான் மலை உத்தமன் என்ற மகுடத்தின் கீழ் அமைந்துளது. பதிகப் பெயர் பாடல்களின் இறுதித் தொடரைக் கொண்டு வழங்குகிறது. நமக்கடிகளாகிய அடிகள், நம்பி என்ற திருப்பதிகம் என்பனவும் இப்பாணியிலேயே அமைந்துள்ளன. ஏழாந் திருமுறையின் இறுதிப்பதிகமே தேவாரத்திருமுறைகளை நிறைவு செய்யும் பாலச் சுருதியுமாம். இப் பதிகம் பத்துப் பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு திருப்பாடலின் இறுதியிலும் நொடித்தான்மலை உத்தமனே என்னும் தொடர் தொடர்ந்து அமைந்துள்ளமை தனிச் சிறப்பாகும்.

நொடித்தான்மலை – அழித்தற் கடவுளது மலை; இஃது கைலைமலை எனப்படும். கைலை மலையை, அப்பரடிகள் புகழ்ந்து போற்றியுள்ளார் போற்றித் திருமாலையில். உத்தமன் – தலைவன், மேலானவன், இறைவன், உயர்ந்தவன், புருஷோத்தமன் அளவிலாச் சீருடையான் என்ற பொருள்களிலே அது அமைந்திருக்கிறது. எனவே மாணிக்கரும் உத்தமன், அத்தன் உடையானடியே நினைந்துருகி எனப்பாடி மகிழ்ந்தார். அறிவையுடைய பொருளை ஆளுந் தகைமை உடையவன் உத்தமன். அறிவிலாப் பொருள்களை உடைமையாய்க் கொள்ளுந் தன்மையால் அவன் உடையான். உடைமைக்குரியவன். தமக்கு உபதேசம் செய்து ஞானத்தந்தையாய் விளங்கினமையால் இறைவனை அத்தன் என்றழைத்தான் பெருந்துறைப் பிள்ளை. நொடித்தான் மலை என்னும் திருப்பதிகம் பல விழுமியங்களைக் கொண்டது. பதிகந் தோறும் திருக்கடைக்காப்பு என்னும், பயன் கூறும்

பாடல்களாக அமைவதை ஞானசம்பந்தர், சுந்தரரும் ஒரு உத்தியாகக் கடைப் பிடித்துள்ளமை பொருத்தமே. இதைப் போன்று தேவாரம் முழுமைக்குமே பாலச் சுருதியாய்த் திகழ்கிறது இவ்விறுதிப் பதிகம்.

நீங்கா உடம்போடு நாயனார் வெள்ளை யானை மீதிவர்ந்து தேவகணம் புடைசூழ விண்வழியாகத் திருக்கயிலை செல்லும் வேளை, இறைனது பேரருட்டிறத்தால் எழுந்த அளப்பிலா ஆனந்தத்தில் பொழிந்த பாடல்களே இப்பதிகம் எனலாம். இப்பதிகம் திருநாவலூராரின் வரலாற்றுக்குத் துணையான அகச்சான்றுகள் கொண்டு மிளிர்கிறது. வான்வழிச் செல்லும் போது அருளிச் செயல்களாக அமைந்த இத்திருப்பதிகத்தை ஒவ்வொருவரும் ஊன்றிப் படிக்க வேண்டும். படிக்கும் போது கண்களே குளமாகின்றன. செல்லுந் தோறும் பாடிய இப்பாசுரங்கள் திருக்கயிலையில் முற்றுப் பெற்றதும், நாயனாரது அருளாணையால் வருணபகவான் இதைச் கொணர்ந்து திரு அஞ்சைக்களத்திற் சேர்த்தான். இந்த உண்மையைத் திருக்கடைக்காப்புப் பாசுரம் தெளிவுடன் எடுத்துச் சொல்கிறது

**ஊழிதோ றூழிமுற்றும்**
**உயர்பொன் நொடித் தான்மலையைச்**
**சூழிசை யின்கரும்பின்**
**சுவைநாவல் ஊரன்சொன்ன**
**ஏழிசை இன்தமிழால்**
**இசைந் தேத்திய பத்திவையும்**
**ஆழிகடல் அரையா**
**அஞ்சை யப்பர்க்கு அறிவிப்பதே**

**தொடித்தான் மலை 10**

நம்பியாரூரர் மலைநாடு சென்று சேரமானுடன் சின்னாள் தங்கி இருந்து, பின்னர் திரு அஞ்சைக்களப் பதியினையடைந்து வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன் என ஆண்டவனிடம் முறையிட்டார். இவ்விண்ணப் பப்பதிகம் மிக்க விழுமியம் கொழிக்கும் பதிகமாகும். இத்திருவாய் மொழிகள் சிவன் உலகத்தவர் வெறுக்கும் கோலங்களை விரும்பி மேற்கொள்வதற்குக் காரணம் என்ன? என வினவுதல் போலவும், அவையெலாம் ஆண்டவன் தன் பொருட்டன்று. உயிர்களின் பாசத்தை, கட்டை அறுத்தற் பொருட்டேயாம், என்னும் கருத்தைக் கருது கோளாக வைத்துத் தன் வாழ்க்கையாகிய பாசத்தையும் அறுத்து எறிய வேண்டும் என்னும் குறிப்புத் தொனிக்கச் சுவாமிகள் அருளிச்செய்தது தெற்றெனப் புலப்படுகிறது.

**"சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக்கனியே"**
**பாடல் 3**

**"இழைக்கும் எழுத் துக்குயி ரேஒத்தியால்"**
**பாடல் 4**

**"பாடும் புலவர்க்கருளும் பொருளென"**
**பாடல் 5**

**"பரவித் தொழு வார்பெறு பண்டம் என்னே"**
**பாடல் 6**

**மகோதை – கொடுங்கோளூர். அஞ்சைக்களம் –அங்குள்ள ஆலயம்**

**"ஆர்க்குங்கட லங்கரை மேல்மகோதை**
**அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே"**
**பாடல் 7**

எனவே தலைக்குத்தலை மாலை என இப்பதிகத்தின் முதற்பாடலில் தலைக்குத்தலை மாலை என்னும் பதிகத்தில் கூறிய குறிப்பால் கைலைநாதன் ஆரூரரை வெள்ளையானையில் ஏற்றிக் கொணர்க எனத் தேவர்கட்கு அருள, தேவர்கள் திருவஞ்சைக்களத்தை அணைந்து, சுவாமிகளைப் பணிந்து, இறை கட்டளை எனப் போற்றி நின்றனர். சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாரை நினைந்து வெள்ளையானையிற்போக, சேரமானும் தனது புரவியில் முன்னே செல்ல. வான்வழியிற் திருப்பதிகம் பாடிக் கொண்டே கைலையை அடைந்தார். சேரமானும் சேர்ந்து தாம்பாடிய ஆதியுலா வெனும்திருக்கைலாய ஞான உலாவை இறைவன் முன் சமர்ப்பணம் செய்து ஆசிபெற்றார்.

இவ்வரலாற்றை ஆதியந்த உலாவாகப்பாடிய சேரர் கோனை .... ஆதரம்பயில் ஆரூரர் தோழமை கொண்டு என அருணகிரியார் பாடியுள்ளார். ஆலாலசுந்தரர் எனப்படும் தம்பிரான் தோழர் பாடிய பாடல்களில் மத்தயானை அருள் புரிந்ததையும், வானவர் மதித்து ஏற்றிப் போனதையும், தனது குறைபாடுகளையும் இன்னும் சிறப்பாக அங்குள்ள முனிவர்கள் இவன் யாரென்ன, "எம் பெருமான் நந்தமர் ஆரூரான்" என விடை பகர்ந்து நாவலூரனை நிரம்ப மதித்ததையும் பெருமிதத்தோடு பாடிய நம்பியின் பெருமைதான் என்னே?

**"மத்தயானையருள் புரிந்து. ஊன்உயிர் வேறு**
**செய்தான் நொடித்தான்மலை உத்தமனே"**
**பதிகம்பாட்டு 1**

**"வானை மதித்து அமரர் வலஞ்செய்து எனை**
**ஏறவைத்த, ஆனை அருள் புரிந்தான்**
**ஷ 2**

**"வேழம் அருள் புரிந்தான் நொடித்தான்மலை**
**உத்தமனே"**
**ஷ 4**

**"மந்திர மாமுனிவர், இவனார் என**
**எம் பெருமான் நந்தமர் ஊரன் என்றான்**
**நொடித்தான் மலை உத்தமனே"**
**ஷ 9**

# சிவபுராணம்

**பண்டிதர் சி. அப்புத்துரை**

தேனினும் இனிய திருப்பாடல்களால் அமைந்த திருவாசகம் என்னும் நூலின் முதல் நான்கு - நெடும்பாடல்களால் அமைந்த - பதிகங்களும் நான்கு அகவல்கள் என்று பேசப்படுகின்றன. அவற்றுள் முதலில் அமைந்த சிவபுராணம் நீங்கலாக உள்ள மூன்றுந்தான் அகவற் பாவகையைச் சேர்ந்தவை. சிவபுராணம், கலிவெண்பா என்னும் பாவினத்தைச் சேர்ந்தது. தென்னந்தோட்டம் ஒன்றினுள் கமுகு ஒன்று நிற்பது தவறாகாது. அவ்வண்ணங் கமுகு நிற்பினும் தென்னந் தோட்டம் தென்னந் தோட்டமேதான். அஃதே போன்று, நான்கு திருப்பாடல்களுள் ஒன்று கலிவெண்பாவாயினும், ஏனை மூன்றாகிய கூடிய எண்ணிக்கையை நோக்கி நான்கு அகவல்கள் என்று சொல்லப்படுவது தவறாகாது.

இனி, சிவபுராணம் என்னும் பதிகத்துக் காணப்படுங் கருத்துக்களையெல்லாம் தொகுத்துச் சொல்வது போன்றதொரு அருமந்த தொடர் சிவபுராணம் என்னும் பதிகத் தலைப்பின் கீழே காணப்படுகின்றது. "சிவனது அநாதி முறைமையான பழமை" என்பதுதான் அத்தொடர். இது, 'திருவாசகத் திருவுள்ளக்கிடை', என்று குறிப்பிடப்படுகின்றது. "சிவனது அருவநிலை", கூறல்", என்று அத்திருவுள்ளக்கிடைக்கு ஒரு விளக்கத்தினையும் சில திருவாசகப் பதிப்புக்களிலே காணமுடிகின்றது. இத்திருவுள்ளக்கிடையை, அதற்கான விளக்கம் போன்றமைந்த தொடரை, யார் எழுதினார் என்றோ, எப்பொழுது எழுதினார் என்றோ தெரியவில்லை. சிவபுராணம் என்னுந் தொடர் சிவனது பழைய வரலாறு என்னும் பொருளை உணர்த்தும். அது அத்தொடரின் நேரிய கருத்து. புராணம் - பழைய வரலாறு எனவே சிவபுராணம், சிவனது பழைய வரலாறு என்பது வெளிப்படை. எனவே எல்லையில்லாத காலமாகச் சிவன் இயற்றிவரும் திருவருட் செயல்கள் பற்றிக் கூறும் பகுதி எனலாம்.

நூலொன்றை எழுதும்போது அதனை அமைக்கும் மரபொன்றுண்டு. வாழ்த்து, வணக்கம், அவையடக்கம் நூற் பெயர், செய்யப்படு பொருள், பயன் என்று விபரமாகச் சொல்வதுதான் அந்த மரபு. சிவபுராணம் என்னும் இப்பகுதியிலே, குறிப்பிட்ட இச்செய்திகளையெல்லாம் நிறைவாகப் பெற முடிகின்றது. எனவே இப்பகுதி திருவாசகம் எனும் நூலின் தற்சிறப்புப் பாயிரம் எனலாம். இக்கருத்து அறிஞர்கள் பலராற் கூறப்பட்டதொன்று.

'நமச்சிவாய வாழ்க', என்னும் வணக்கத்துடன் தொடங்கும் இப் பாடலின் முதலாம் அடி தொடக்கம், ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க என்பது ஈறாக, வாழ்த்துக் கூறப்படுகின்றது. "நமசிவாய" எனும் திருவைந்தெழுத்து மந்திரத்தை வாழ்த்தி, அந்தத் தத்துவத்திற்குரிய நாதன் திருவடிகளை வாழ்த்தி, தம்நெஞ்சினின்றும் ஒரு கண்ணிமைப்போதுகூட நீங்காத அவனுடைய திருவடிகளை வாழ்த்தி, திருப்பெருந்துறையில் எழுந்தருளி ஆட்கொண்ட குருநாதனை அவனுடைய திருவடிகளை வாழ்த்தி, ஆகமப் பொருளாகி நின்று அருள்பவனது தாள்களை வாழ்த்தி, ஒருவனாய் இருந்து கொண்டே எல்லாப் பொருள்களிலும் தங்கும் இயல்புடையவனது திருவடிகளை வாழ்த்தி அமைகின்றது இப்பகுதி.

திருவாசகம் முழுமையும் திருவைந் தெழுத்தின் விளக்கம் என்னும் கருத்துப் புலப்படும்படியாக "நமச்சிவாய வாழ்க" என்று மாணிக்க வாசக சுவாமிகள் தொடங்கியிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இன்னும், மறைப்பு நீக்கமாகிய திரோதாயி, இழிந்த நிலைக்குள்ளாக்கும் ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை, உயிர், திருவருள், சிவம் என்பன பற்றிய கருத்துகளையெல்லாம் தந்துகொண்டிருப்பன இவை என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அடுத்து ''வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" என்பது தொடக்கம், "சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க" எனப்படும் பத்தாவது அடிவரை இறைவன் திருவடிகள் மேம்பட்டுச் சிறப்பனவாக என்று பேசப்படுகின்றது. ஏழையாகிய என் மன ஓட்டத்தை இல்லாமற் செய்பவனும், பிறவித்துன்பத்தை ஒழிப்பவனும், தன்னை வணங்காது புறத்தவராய் இருப்பவர்க்கு

எட்டாதவனாக இருப்பவனும், கை கூப்பி வணங்குவார்க்கு மனமகிழ்ந்து அருள்பவனும், தலையை வளைத்துத் தாழ்ந்து வழிபடுவோரை உயரச்செய்பவனும் ஆகிய இறைவனது மென்மை பொருந்திய மலர்ப் பாதங்கள் சிறப்படைவனவாக என்று சுவாமி கூறுகின்றார்கள்.

அடுத்துவரும் "ஈசனடி போற்றி", என்பது தொடக்கம், "ஆராத இன்பம் அருளுமலை போற்றி" எனவரும் பதினாறாவது அடி ஈறாக உள்ள பகுதியில் எட்டுத் தடவைகள் வணக்கம் செலுத்தப்பட்டுளது. இவை, வள்ளுவராற் குறிக்கப்பட்ட எண்குணங்களையும் சிந்திக்க வைக்கின்றன. அடுத்து வரும் "சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்னும் இரண்டு அடிகளுடன் வணக்கத்திற்கான பகுதி நிறைவுறுகின்றது.

அடுத்து வரும் "சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை முந்தைவினை முழுதும் ஓய உரைப்பன் யான்" என்னும் பத்தொன்பதாம் இருபதாமடிகள், செய்ய இருப்பது பற்றிக் குறிப்பிடுகின்றன. என் முன்னைப் பிறவிகளிற் சேர்த்துக்கொள்ளப்பட்ட வினைகளை இறைவன் பொருள் சேர் புகழ்பாடி நீக்கிக் கொள்வேன் என்கின்றார்.

தொடர்ந்து, "கண்ணுதலான் தன் கருணை கண்காட்ட வந்தெய்தி" என்பது தொடக்கம் "பொல்லா வினையேன் புகலுமாறொன்றறியேன்", என்னும் இருபத்தைந்தாவது அடி ஈறாக அவையடக்கம் கூறப்படுகின்றது. உலகெலா மாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் நிற்கும் இறைவனைக் – கொடிய வினையையுடைய யான் – புகழும் முறைமையைக் கொஞ்சமும் அறியமாட்டேன், என்று தம் சிறுமையையும் இறைவன் பெருமையையுங் காட்டுகின்றார்.

பின்னர், "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி", என்பது தொடக்கம் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்னுந் தொண்ணூற்று மூன்றாவது அடிவரையுள்ள பகுதியால் அடைக்கலமாதல் பற்றிக் கூறுகின்றார்கள். அசையும் பொருள்கள், அசையாத பொருள்கள் எனப் பொருள்கள் இரு வகையின. புல் பூடு, மரம், கல் என்னும் நான்கும் அசையாதவை. புழு, பாம்பு, பறவை, மிருகம், மனிதர், அசுரர், முனிவர், பேய், கணங்கள், தேவர் என்னும் பத்தும் அசையும் பொருள்கள். எங்கும் நிறைந்திருக்கும் இறைவன், தீயிடத்து வெம்மையனாகியும், தண்ணீரிடத்துக் குளிர்ந்தவனாகியும், உயிர்க்குயிராகியும் நின்று நன்னெறி காட்டுவான். பூவில் மணமுண்டு. ஆன்மாவில் இறைவனுண்டு. இறைவன் நுண்ணியன். நுண்பொருள்தான் எங்கும் வியாபகமாகமுடியும். தோற்றம், நிலைபேறு, முடிபு இல்லாதவன் அவன். அவ்வண்ணமானவன் உயிர்க்குயிராகி ஐந்தொழிலைச் செய்து ஆன்மாவை அணைத்துக்கொள்கின்றான். பூதங்கள் ஐந்திலும் வியாபகமாகி நிற்கின்ற காரணத்தால் அவற்றின் நிறம் இறைவன் நிறமாகின்றன. "பொன்பார், புனல் வெண்மை, பொங்கும் அனல் சிவப்பு, வன்கால் கருமை, வளர் வான்தூமம்" என்னும் உண்மை விளக்கச் செய்யுட்பகுதி அந்த ஐந்து நிறங்களையும் குறிப்பிடுகிறது. "வித்தையோடீசர் சாதாக்கியம் சத்தி சிவங்கள் ஐந்துஞ் சுத்த தத்துவஞ் சிவன்தன் சுதந்திர வடிவமாகும்" என்பதொரு கருத்து சிவஞான சித்தியாரில் உண்டு. இதனடிப்படையில் அவன் ஐந்து வகை வடிவினனாகக் குறிக்கபட்டிருக்கவும் முடியும்.

அழுக்கைச் சேர்ப்பது மூலம் முன்பிருந்த அழுக்கை நீக்குவது போல கன்மம் மாயை என்பவற்றின் உதவி கொண்டு ஒன்பது வாயிற் குடில் மூலம் ஆணவம் கெடுக்கப்படுகின்றது. உடம்பு கொடுக்கப்பட்டது மலநீக்கத்திற்காக என்பது தெளிவு. நாய் நன்றியுள்ளது மட்டுமன்று தலைவனை அறியக்கூடியதும் அதுதான். அன்பிற்குத் தாய்; அதற்கும் மேலான கருணை வடிவானவன் இறைவன். அக்கருணை வெள்ளத்தில் மனம் நீராய் உருகி நிற்க – அந்நிலையில் உயிர் இறையுடனாகிவிடும். தனக்கென்று எதுவுமில்லாத இறைவன் உயிர்களுடனாகும்போது அவற்றின் இன்பதுன் பங்களை ஏற்றுக் கொள்வதால் ''இல்லானே உள்ளானே "என்று குறியீடு செய்யப்படுகின்றார்.

அவனை உணர்வினால் மட்டுந்தான் கண்டு கொள்ளமுடியும். அவ்வண்ணமாய இறைவனை – தில்லைக்கூத்தனை – அவன் பற்றிப்பாடிய பாடலைப் பொருள் உணர்ந்து சொல்லி வணங்குபவர்கள் எல்லோரும் சிவபுரத்துச் செல்வராகிய அவன் தாளிணைகளை அடைந்து நிலைபெறுவர். இறுதி இரண்டு அடிகளாலும் சிவபுராணத்தை ஓதுபவர்கள் பெறக்கூடிய பயன் குறிப்பிடப்படுகின்றது.

மாத மகத்துவம்

# சனீஸ்வரவழிபாடு

செல்லையா நவநீதகுமார்

சூரியனுக்கும் சாயா தேவிக்கும் புத்திரராகச் சனிபகவான் அவதரித்தார். யமனின் தம்பி இவர். சனைச்சுரன், காரி, முடவன், மந்தன் என்பன இவர் வேறுபெயர்களாம். சூரியனில் இருந்து சனிக்கிரகம் அதிக தூரத்தில், சுமார் 88 கோடி மைல்களுக்கு அப்பால் உள்ளது. இதனால் இவர் இராசி மண்டலத்தைச் சுற்றிவர நீண்ட காலம் எடுக்கும்.

சனிபகவான் ஆயுள் காரகன் ஆவர். ஒருவருக்கு ஆயுளை நிர்ணயித்து அழிவை உண்டாக்குபவர் அவரே. சுபருடன் சேர்ந்து நல்ல ஸ்தானங்களில் இருந்தால் நன்மையைச் செய்வார். இதனாற் சனியைப் போலக் கொடுப்பாரும் இல்லை, கெடுப்பாருமில்லை என்ற முதுமொழி அமைந்துள்ளது. நாம் முற்பிறப்பிற் செய்த வினைகளின் பயனாக இப்பிறப்பிலே இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம். அவ்வாறு முன்செய்த பிராரத்துவ கன்மம் அனுபவிக்க ஏதுவாகப் பல இன்னல்களைக் கொடுத்து முடிவில் நன்மை அடையச் செய்வார் சனிபகவான்.

**வலம்வரவேண்டிய முறைகள்**

**பிரமசாரிகள் வலம்வரக்கடவர். கிருகத்தரும் வானப்பிரத்தரும் வலமும் இடமுமாக வரக்கடவர். சந்நியாசிகள் இடம்வரக்கடவர். வலஞ் செய்த வினாலே போகமும், இடஞ் செய்தவினாலே போக மோட்சமும் உண்டாகும்.**

**-நாவலர்.**

துலாராசியில் இவர் உச்சம் பெறுவார். மேடராசி இவரின் நீசராசி; மகரராசி, கும்பராசி என்பன இவர் ஆட்சிக்கு உட்பட்ட சொந்தஸ் தானமாகும். மகரராசி முழங்காற் பகுதியையும், கும்பராசி கணுக்காற் பகுதியையும்குறிக்கும். இவ்விராசிகளின் பலத்தையும் இராசிநாதன் சனிபகவானின் பலத்தையும் பொறுத்து இவ் உறுப்புக்களின் பலத்தை அறியலாம். உடலில் நரம்புகளுக்கு இவரின் தொடர்பு உண்டு. தாமதம் இவரின் குணமாகும்.

பூசம், அனுசம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களுக்கு இவர் அதிபதி ஆவார். இவரின் தெசை பத்தொன்பது வருடங்கள். புதன், குரு, சுக்கிரன் இவரின் மித்திரர். சூரியன், சந்திரன், செவ்வாய் பகைவர்.

சனிபகவான் அமையும் இராசியை விட அவரின் பார்வை படும் இராசி பலம் கூடும். தான் நின்ற இராசியில் இருந்து மூன்றாம், ஏழாம், பத்தாம் இராசிகளை நோக்குவார்.

இவர் ஒர் இராசியில் இரண்டரை வருடங்கள் சஞ்சரிப்பார். ஜாதகத்தில் சந்திர லக்கினத்திலும், அதற்கு முன்னும், பின்னுமாக 2ம் 12ம் இடங்களில் இவர் சஞ்சரிக்கும் காலம் ஏழரைச் சனியாகும். ஒருவரது வாழ்வில் மூன்று தடவைகள் ஏழரைச்சனி தொடரும். இதில் முதலாவது ஏழரைச்சனி மங்குசனி என்றழைக்கப்படும். இரண்டாவது ஏழரைச்சனி பொங்குசனி எனப்படும். இதில் திருமணம், தொழிற்சிறப்பு, பதவி உயர்வு போன்றனவும், நற்பலன்களும் கிடைக்க வாய்ப்புண்டு. மூன்றாவது ஏழரைச் சனி மாரகசனியாகும். இதில் மாரகம், அல்லது மாரகத்திற்கு ஒப்பான நோய், பொருள் இழப்பு, வேலையாட்களால் துன்பம் போன்றன ஏற்படலாம்.

"நானிலந்தனில் சுக்கிரன் குருடனானதுஞ் சனி ரெண்டில்
பாவி சூர்ப்பனகை மூக்கறுந்ததும் பகரும்சனி ஜெனனமாம்"

என்ற பாடலில் இருந்து சுக்கிரன் கண் இழந்து குருடானதும், சூர்ப்பனகை மூக்கு அறுபட்டதும் ஏழரைச் சனியில் என்பது தெரிகிறது.

சந்திரலக்கினத்திற்கு எட்டாம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலம் அட்டமத்துச் சனியாகும். அட்டமத்துசனியும் பலவித இன்னல்களை ஏற்படுத்தும். அகப்பட்ட வனுக்கு *அட்டமத்திற் சனி, ஓடிப் போனவனுக்கு ஒன்பதிற் குரு.*

இலங்கை இராவணனுக்கு எட்டிலே சனி, இராமனாலுயிர் மாண் டான். இராவணன் வலிமை, வீரம் என்பவற்றை இழந்து இராமபிரானால் உயிர் பிரிந்து அழியும் நிலை ஏற்பட்டது. அட்டமத்துச்சனியால் என்று அறிகிறோம்.

ஜனன காலத்தில் சந்திரன் நின்ற இராசிக்கு நான்காம் இடத்தில் சனிபகவான் வரும் போதும் சில இன்னல்களைக் கொடுப்பார். இந்த ஸ்தானம் அர்த்தாஷ்டம ஸ்தானம் என்ற பெயர் பெறும்.

ஏனைய ஸ்தானங்கள் ஆகிய மூன்றாம், ஆறாம், பதினோராம் இடங்களில் சனிபகவான் சஞ்சரிக்கும் போது நற்பலன்களை அளிப்பார். ஒரு இராசியில் இரண்டரை வருடங்கள் வீதம் பன்னிரண்டு இராசிகளையும் சனிபகவான் வலம் வர எடுக்கும் காலம் முப்பது வருடங்களாகும். ஆக முப்பது வருடம் வாழ்ந்தாருமில்லை முப்பது வருடம் தாழ்ந்தாரும் இல்லை என்பது சனிபகவானை வைத்துக் கூறிய முதுமொழியாகும். ஒரு சுற்றில் முப்பது வருடங்கள் சனிபகவானால் துன்பங்கள் அனுபவித்தாலும் சனி பகவானின் இரண்டாவது சுற்றில் இன்பம் நுகர்வர்.

சனிபகவான் முடிசார்ந்த மன்னர் முதல் குடிமக்கள் வரை எல்லோரையும் பீடித்து அவரவர்க்குரிய பலன்களைக் கொடுப்பதிற் சாமர்த்திய சாலி.

வேலனை வேங்கை மரமாக்கி வைத்தாய்
விறகு கட்டுச் சொக்கர் தமை விற்கவைத்தாய்
மாலவனை யுரலோடு கட்டு வித்தாய்
வள்ளிதனைக் குறவரது வனத்தில் வைத்தாய்
காலனை மார்க் கண்டனுக்கா வரனுதைத்த
கார ணமும் நீபிடித்த கருமத்தாலே
சாலவுனையான் றொழுதே னெனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

முருகப்பெருமானைத் தினைப்புனத்தில் வேங்கை மரமாகச் செய்ததும், சிவபெருமானை விறகு கட்டுச் சுமந்து விற்கச்செய்ததும், திருமாலை உரலுடனே கட்டுவித்ததும், வள்ளி நாயகியாரைக் குறவர்கள் வனத்திலே தினைப்புனக் காவலராக வைத்ததும், மார்க்கண்டன் உயிர் கவரச்சென்ற யமனைச் சிவபெருமான் உதைத்ததும், சனிபகவான் பீடித்தமையாலாகும்.

நளச்சக்கரவர்த்தி மனைவி தமயந்தியோடு வனத்திலே அலைய நேர்ந்ததும் கலித் தொடர் பினாலாகும். நளன் பல தலங்களுக்கும் யாத்திரை செய்து சிவவழிபாடு செய்ததன் பயனாகக்கலி நீங்கியது.

விளங்கிழை மடந்தை மலை மங்கையொருபாகத்
துளங்கொள விருத்திய வொருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன் கெழுவி நாளும் வழிபாடு செய்நள்ளாறே

சனீஸ்வரர் மெலிந்த தோற்றமுடையவர். கரியநிறத்தவர். சூலம், வில்,தாங்கிய இரு கரங்களுடன் அபயம், வரதம் என்பவையும் சேர்ந்து நான்கு திருக்கரங்களுடையவர். கருநிற ஆடைதரித்து, நீலநிற மாலைகள் அணிந்துள்ளார். வில்வடிவான ஆசனத்தில் இருப்பவர் காகத்தை வாகனமாக உடையவர். இவருக்குரிய திசை மேற்கு; உலோகம் இரும்பு; இரத்தினம் நீலம்; தான்யம் எள்; இவரது அதிதேவதை விஷ்ணு.

சூரிய பகவான் கன்னிராசியில் சஞ்சரிக்கும் காலம் புரட்டாதி மாதமாகும். இம்மாதத்தில் வரும் சனிக் கிழமைகளில் விரதமிருந்து வழிபட்டாற் சனிக்கிரக தோஷம் சாந்தியாகும்.

புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனீஸ்வரனை வழிபட்டு அவர் சந்நிதியில் பாபமாகிய கறுப்புத் துணியில் எள் பொட்டணியாக்கிச் சனீஸ்வரனின் கிருபா வெள்ளமாகிய எள்நெய்யில் அப்பொட்டணியை அமிழ்த்தி அவர் கோபாக்கினியால் நீறாக்கிச் சனிபகவானின் துன்பங்களிலிருந்து விலகலாம். சனீஸ்வரவழிபாடு சிவஸ்தலங்கள் அல்லது விஷ்ணு ஆலயங்களில் மேற்கொள்ளலாம்.

அன்று சனீஸ்வரதோத்திரம், கோளறு பதிகம் என்பவை ஓதுவதற்கு உகந்தனவாகும். காகத்திற்கு எள் கலந்த உணவினை ஆலிலையில் இடுதல் வேண்டும். திருநள்ளாறு சேத்திரம் சனிக்கிரக வழி பாட்டிற்கு மிகவும் உகந்த தலமாகும். இத்தலத்தை வழிபட்டாற் கலிநீங்கும்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருந்த வேளை, மதுரையில் இருந்த மங்கையர்க்கரசியாரும், குலச்சி றையாரும் திருஞானசம்பந்தரை மதுரைக்கு வருமாறு அழைத்தனர். திருஞானசம்பந்தரும் அவர்கள் அழைப்பை ஏற்று மதுரைக்குப்புறப்பட ஆயத்தமானார்.

அவ்வேளை அப்பரடிகள், இப்போது கிரகநிலையும் நாள்களும் நன்றாகஇல்லை. ஆதலாற் செல்ல வேண்டாம் எனத்தடுத்தார். அதற்குத் திருஞானசம்பந்தர் "சந்திரனையும், கங்கையையும் சடாமுடியிலே சூடியிருக்கின்ற சிவபெருமான் என் உள்ளத்தில் இருக்கின்றபடியால் நவக்கிரகங்கள் என்னை ஒன்றும் செய்யமுடியாது. அவை அடியவர்கு நல்ல பலனையே செய்யும்" என்று கூறிக் கோளறுபதிகம் பாடினார்.

சில நட்சத்திரங்களும் அந்நட்சத்திர நாட்களிற் செய்யும் கருமங்களும் தீமைபயக்கலாம்:

அவை கூட அடியவர்களுக்கு நன்மை செய்யும், அவை தீமை செய்யா என்று கூறியுள்ளார் சம்பந்தர்.

**என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க**
**எருதேறி யேழை யுடனே**
**பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஒன்பதோ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்**
**உடனாய நாள்கள் அவைதாம்**
**அன்பொடு நல்ல நல்ல அவைநல்ல நல்ல**
**அடியா ரவர்க்கு மிகவே**

ஊமத்தமாலை, கங்கை ஆகியவற்றைச் சடாமுடியிலே சூடி, பிரம, விஷ்ணுக்களின் எலும்பு, பன்றியின்கொம்பு மார்பிலே துலங்க, உமையம்மை யாருடன் இடப வாகனத்தில் ஆரோகணித்து என் உள்ளத்திலே புகுந்த தன்மையால் நாள்களும் நட்சத்திரங்களும் தீமை செய்யா;அவை அடியவர்க ளுக்கு நன்மையே செய்யும் என்று கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தர் அருளிய கோளறு பதிகத்தை நாள்தோறும் ஓதிவந்தால் நாம் துன்பங்களில் இருந்து விடுபடலாம். மேற்கூறிய பன்னிரண்டு நட்சத்திரங்களும் தீமை தரா.

**தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி**
**வளர்செம் பொ னெங்கும் நிகள**
**நான்முகன் ஆதியாய பிரமா புரத்து**
**மறைஞான ஞான முனிவன்**
**தானுறு கோளு நாளும் அடியாரை வந்து**
**நலியாத வண்ணம் உரைசெய்**
**ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்**
**அரசாள்வர் ஆணை நமதே.**

சுந்தரமூர்த்திநாயனார் சங்கிலியாரை விட்டுப் பிரிவதில்லை எனச் சத்தியம் செய்து கொடுத்து அவரைத் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார். சிலகாலம் செல்ல அவர் திருவாரூர் சென்று தியாகேசப் பெருமானைத்தரிசிக்க எண்ணினார். தியாகேசப் பெருமானைத் தரிசிக்கும் ஆவலினால் தான் செய்த சத்தியத்தினையும் மறந்து அவ்வூரை விட்டுப் புறப்பட்டார்.

ஊர் எல்லை தாண்டியதும் சுந்தரரின் இரு கண்களும் பார்வை இழந்தன. அவர்குருடரானார். சத்தியம் தவறியதால் அவருக்கு அவ்விடர் வந்தது. இந்நிலையில் .மிகவும் வருந்தினார். அவர்பாடிய பதிக மொன்றில் மகத்திற்புக்கதோர் சனியெனக்கானாய் என்று பாடியுள்ளார்.

முருகப்பெருமானது வீரக்கழல் அணிந்த திருவடியும், கடப்பமலர் மாலையும் தண்டாயுதமும் பன்னிருதோள்களும், கருணை கூர் முகங்களாறும் எனக்கு முன்னே தோன்றும் போது நாள்களும், கோள்களாகிய நவக்கிரகங்களும், ஆயுள்முடிவில் உயிரைக்கவரும் கூற்றுவனும் வருத்தமுடியாது என்கிறார் அருணகிரிநாதர்.

**நாளென்செயும் வினைதான் என்செயும் எனைநாடி வந்த**
**கோளென்செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசரிரு**
**தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்**
**தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே**

**இனி, சனிக்கிரகதோச நிவிர்த்திபற்றி நோக்குவோம்**

சனிக்கிரக தோசமுடையவர்கள் பிரதி சனிக்கிழமை தோறும் அல்லது புரட்டாதிச்சனிக் கிழமைகளில் விரதமிருந்து சனீஸ்வரனை வழிபட்டுச் சனீஸ்வரன் சந்நிதியில் எள்எண்ணெய் எரித்து வழிபடலாம். சனிக்கிழமைகளில் சனிதோத்திரம், கோளறு பதிகம் பாராயணம் பண்ணலாம். எள், கரிய நிறப் பசு, கறுப்புத்துணி என்பன தானம் கொடுக்கலாம்.

இரும்புப் பாத்திரம் ஒன்றில் எள்நெய் நிரப்பிச் சனி தோசமுடையவர் தனது முகவிம்பம் அதில் தெரியும் வண்ணம் பிராமணருக்குத் தானங்கொடுக்கலாம்.

கருங்கல் ஒன்றில் சனீஸ்வர சக்கரம் ஒன்றை வரைந்து அதைத் தோசமுடையவர்தன்னைச்சுற்றி திருஷ்டி கழித்து ஆறு, குளம், பாழடைந்த கிணறு, சமுத்திரம் என்பவற்றில் ஒன்றிற் போடல்,

சனிக்கிழமைகளிற் கருநிறப்பசுவிற்கு அறுகம்புல் கொடுத்தல்,
வன்னி சமித்துக்கொண்டு ஹோமஞ்செய்தல்,

எனபவற்றைச் செய்வதன் மூலம் சனிபகவானின் தோசம்குறைந்து, அவர் சாந்தமாக, அனுக்கிரகம் பெறலாம்.

சனிக்கிழமைகளிற் கந்தை உடுத்தல், கடன் வாங்குதல் என்பவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

**நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே**
**ஆளாய வன்பு செய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்**
**கேளாய் நம்கிளை கிளைக்கும் கேடுபடாத்திற மருளிக்**
**கோளாய நீக்குமவன் கோளிலி யெம் பெருமானே.**

# நவராத்திரி

"சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்பது திருவருட் பயன். சத்தி என்பது செயற்படுவதைக் குறிக்கும். இறைவன் எவ்வண்ணம் இருக்கின்றானோ அவ்வண்ணம் சத்தியும் நிற்பாள்.

**சத்தியாய் விந்துசத்தியாய் மனோன்மனிதானாகி**
**ஒத்துறு மகேசையாகி உமை திருவாணியாகி**
**வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தியொருத்தியாகு**
**மெத்திற நின்றானீசன் அத்திற மவளும் நிற்பாள்"**

என்பது சிவஞானசித்தியார்.

பராசத்தி பிரமனிடத்திற் சிருஷ்டி சத்தி பிராமியாகவும், விஷ்ணுவிடத்து, திதி சத்தி வைஸ்ணவியாகவும் உருத்திரனிடத்து, சம்கார சத்தி உமையாகவும் உள்ளாள்.

அகில உலகையும் ஆக்கியும், காத்தும், அழித்தும் அருள் புரியும் சத்திக்கு உரிய விரதங்கள் மூன்றாகும். அவையாவன சுக்கிரவாரம், ஐப்பசி உத்தரம் நவராத்திரி என்பனவாகும்.

நவராத்திரி ருதுவிற்கொன்றாகக் கொண்டாடப்படும் என்று சொல்வாருளர். ஆனால் இரண்டு காலப் பகுதியிற் கொண்டடுவதே இப்போதைய வழக்கமாகியுளது. ஒன்று, வசந்தருதுவாகிய சித்திரை மாதம் சுக்கிலபட்சப் பிரதமை முதல் நவமியீறாக உள்ள ஒன்பது தினங்கள் அனுட்டிப்பது. இரண்டாவது சரருதுவாகிய புரட்டாதி மாதத்தில் அனுட்டிக்கப்படுவது. புரட்டாதி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் நவமிவரையுள்ள ஒன்பது நாள்கள் நவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படும். இக்காலத்தில் இறைவியைக் கும்பத்திலும் விம்பத்திலும் ஆவாகனம் பண்ணிப் பூசனை புரிந்து வழிபடல் வேண்டும்.

முதல் எட்டு நாட்களும் ஒரு பொழுது உண்டு ஒன்பதாம் நாள் நவமியன்று உபவாசம் இருப்பது உத்தமம். இக்காலங்களில் அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை, போன்ற தோத்திரங்களைப் பாராயணம் செய்யலாம். முதல் மூன்று நாளும் வீரம் வேண்டித் துர்க்கா தேவியைப் பூசிப்பர். இதனாற் பயநாசம் உண்டாகும். நான்காம், ஐந்தாம், ஆறாம் நாள்கள் இலக்குமி தேவியைப் பூசிப்பர். இதனால் தனம், தானியம், சுவர்ணம் முதலியன விருத்தியாகிச்செல்வச் செழிப்புண்டாகும்.

இறுதி மூன்று நாளும் கலைகளுக்கு அதிபதியான சரஸ்வதியைப் பூசிப்பர். இதனால் வித்தை, கல்வி, தொழில் என்பன விருத்தியாகும்.

இதில் வரும் நவமி மகாநவமி எனப்படும். இதனால் நவராத்திரி மகா நோன்பு எனப்படும். இக்காலத்தில் வடை, அவல், தேன்குழல், கற்கண்டு, எள்ளுருண்டை முதலியவ்றை நிவேதித்துக், கோங்கு, மகிழ் ஆகிய புஸ்பங்களால் அம்பாளைப் பூசிக்க வேண்டும்.

இறுதிநாளான பத்தாம் நாள் விஜயதசமியாகும். இத்தினத்தில் அம்பாள் மகிடாசுரனைச் சம்காரம் செய்தாள். மகிடம் என்பது எருமை; அதாவது விட்டுக் கொடுக்காத, விலகி நடவாத தன்மைகளையுடையது எருமை. எம்மிலும் அப்படியானகுணம் உண்டு. இக்காலத்தில் விரதமிருந்து மிருகத் தனமான குணங்களை அம்பாள் அனுக்கிரகத்தினால் அழித்து ஞான நிலையை அடையும் தன்மையைக் குறிக்கும்.

மகிடாசுரசம்காரத்தை நினைவு படுத்தும் வகையில் ஆலயங்களிற் கன்னிவாழை வெட்டுதல் ஆகிய மானம்பூத்திருவிழா நிகழ்கிறது.

பாண்டவர்கள் அஞ்ஞாதவாச காலத்தில் ஆயுதங்களை ஒரு வன்னிமரப் பொந்தில் ஒளித்து வைத்திருந்தனர். அஞ்ஞாதவாசம் முடிந்ததும் தமது ஆயுதங்களை எடுத்து, வன்னி மரத்தை வாளால் வெட்டிவிட்டனர். இத்தினம் விஜய தசமியாகும். வித்தைகள் ஆரம்பிப்பதற்கு இத்தினம் ஏற்ற தினமாகும்.

நவராத்திரி காலங்களில் ஒருவயது முதல் ஒன்பது வயது வரையுள்ள பெண்பிள்ளைகளைத்தேர்ந்தெடுத்து, முதல் நாள் ஒருவயதுடையவரையும், இரண்டாம் நாள் இரண்டு வயதுடையவரையும், இப்படியே ஒன்பது நாள்களும் ஒன்பது பெண்குழந்தைகளையும் பூசை செய்து, அவர்களுக்கு உபசாரம் செய்து, கன்னி வழிபாடு செய்வது சிறப்பானதாகும்.

நவராத்திரி காலங்களில் இறைவி மகேஸ்வரி, கௌமாரி, வராகி, மகாலக்குமி, வைணவி, இந்திராணி, பிராமி, நரசிம்பி, சாமுண்டி ஆகிய நவசத்திகளாகி அருள் புரிகின்றாள்.

சுகேதன் என்னும் அரசன் தன் பகைவர்களால் நாடு, நகரை இழந்து காட்டில் இருந்தான். கவலையுடன் இருந்த சுகேதன் ஆங்கீரச முனிவரைச் சந்தித்துத் தன் துயரத்தைக் கூறினான். முனிவர் நவராத்திரி விரதத்தின் பெருமையை எடுத்துரைத்து அவ்விரதத்தை அனுட்டிக்குமாறு கூறினார். சுகேதன் நவராத்திரி விரதத்தை முறையாக அனுட்டித்து அம்பிகை அருளினால் இழந்த அரசுரிமையை மீண்டும் பெற்று நல்வாழ்வு பெற்றான்.

சீதாபிராட்டியை இழந்த இராமபிரான் கிட்கிந்தையிற் கவலையுடன் இருந்தார். அங்கு வந்த நாரத மகரிசி இராமபிரனிடம் நவராத்திரி மகிமை பற்றிக் கூறினார். இராமபிரான் நாரதர் உதவியுடன் நவராத்திரி விரதம் நோற்றார். இதனால் அம்பிகையின் அருள் பெற்று இராவணனை ஜெயித்துச் சீதையைச் சிறைமீட்டார்.

ஆலயங்கள், பாடசாலைகள், வீடுகள், வர்த்தக, தொழில் நிறுவனங்கள், போன்ற இடங்களிலெல்லாம் நவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப் பட்டுவருகின்றது.

# மாளயம்

மாளயம் என்பது பிதிர் கருமமாகும். இது மஹாளயம் என்றும் பெயர் பெறும். இது ஒரு பொது சிரார்த்த (திவசம்) மாகும்.

புரட்டாதி மாத அபரபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம் மாளயபட்சமாகும். பிதிர்களைத் திருப்திப்படுத்தவும் அவர்கள் நற்கதி அடையவும் பிதிர்க்கருமங்கள் செய்ய வேண்டும். இல்லறத்தானுக்கு உரிய கருமங்களிற் பிதிர்க் கடனும் ஒன்று. ஐவேள்விகளில் பிதிர்யக்ஞமும் (பிதிர் வேள்வி) ஒன்று.

**'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கு றானென்றாங் கைம்புலத்தா றோம்ப றலை'**

என்பது திருக்குறள். பிதிர்களின் உறை விடம் தென்திசை ஆதலால் தென்புலத்தார் என்று பெயர் பெறுவர்.

சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் தெட்சணாயன காலத்தின் நடுப்பகுதி புரட்டாதி மாதமாகும் இக்காலம் சூரியன் பூமிக்கு நேரே நிற்குங்காலம். சந்திரனும் (அபரபக்கத்தில்) தென்பாகத்திற் பொருந்தி இருக்கிறது. இக்காலம் பிதிர் கருமங்களுக்கு ஏற்றதாகக் கொள்ளப்படும்.

ஒருவர் இறந்த தினத்தில் அவருக்குச் சிரார்த்தம் (திவசம்) செய்தல் வேண்டும் இறந்ததினம் தெரியாவிட்டால் அந்த மாதத்தில் அமாவாசையன்று செய்தல் வேண்டும். அல்லது மாளயபட்சத்திற் செய்துகொள்ளலாம். தெரிந்தோ, தெரியாமலோ சிரார்த்தத்தைச் செய்யாதுவிட்டவர்கள் மாளயபட்சத்திற் பிதிர்க்கருமம் செய்தல் வேண்டும்.

இந்தப்பட்சம் முழுவதும் பிதிர்க்கரும் செய்தால் வருடம்முழுவதும் செய்த பலன் கிடைக்கும். பிரதமையில் தனசம்பத்தும், துவிதியையில் பிரஜாலாபமும், திருதியையில் வளர்ச்சிலாபமும், சதுர்த்தியில் சத்துருநாசமும், பஞ்சமியில் சம்பத்தும், சஷ்டியில் புகழும், சப்தமியில் கணாதிபத்தியமும், அட்டமியில் சிறந்த புத்தியும், நவமியில் ஸ்திரீசம்பத்தும், தசமியில் இஷ்டசித்தியும், ஏகாதசியில் வேத சித்தியும், துவாதசியில் பிரஜா விருத்தியும், திரயோதசியில் பசு விருத்தியும் சதுர்த்தசியில் புஷ்டியும், அமாவாசையில் தீர்க்க ஆயுளும் கிடைக்கும். யந்திரங்களால் இறப்போருக்குச் சதுர்த்தசியிற் பிதிர் கருமம் செய்வது சிறந்தது.

இப்பட்சத்தில் வரும் பரணி, அட்டமி கஜச்சாயை எனப்படும். கஜச்சாயை எனப்படுவது புரட்டாதி மாதத்தில் எந்த வாரத்திலாவது மகநட்சத்திரமும் திரயோதசித் திதியும் கூடிவருவது. இது ஒரு புண்ணிய காலமாகும். இக்காலத்திற்செய்யும் கருமத்திற்கும் பலன் அதிகம்.

பிதிர்க்கருமங்களாற்றச் சிறந்த தலங்களாக அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பன அமைந்துள்ளன. காயாவிற் செய்யப்படும் சிரார்த்தம் மிகவும் விசேட மானதாகும். திரயோதசியில் செய்யும் சிரார்த்தம் காயா சிரார்த்தத்தையொக்கும்.

நாம் அனுப்பும் தபால், காசுக்கட்டளை போன்றவற்றைத் தபாற்கந்தோரில் இருப்பவர்கள் உரியவர்களிடம் கொண்டு சென்று கொடுப்பர். இது போலப் பிதிர்க்கருமத்தில் செய்யப்படும் தர்ப்பணம், தானம் முதலியவற்றின் பலன்களை உரியவர்கள் இருப்பிடம் அறிந்து அவர்களிடம் சேர்ப்பிப்பர் பிதிர் தேவதைகள். ஸ்கந்தர் , சண்டர், கணாதீதர் என்போர் பிதிர் தேவதைகளாவர். சமய ,விசேட, நிர்வாண தீட்சிதருக்கு சாந்தர் சதாசிவர் ஈசர் என்போர் பிதிர் தேவதைகளாகும். பிதாவின் உயிர் ஸ்கந்த பதத்தில் ஸ்கந்தசொரூபமாகவும், பாட்டனுடைய உயிர் சண்டபதந்தில் சண்ட சொரூபமாகவும் முப்பாட்டனுடைய உயிர் கணாதீதபதத்தில் கணாதீத சொரூபமாயும் இருக்கும்.

இக்காலத்தில் விரதமிருந்து பிதிர்தர்ப்பணம், தான, தருமம், சாதுக்கள், அடியவர், ஏழைகள் ஆகியோருக்கு அமுதளித்தல் போன்றன செய்தல் வேண்டும்.

# கேதார கௌரி விரதம்

சிவ விரதங்களுள் கேதார விரதமும் ஒன்று. கேதார நாதரைக் குறித்து கௌரி அம்பாள் நோற்ற விரதம் ஆதலாற் கேதார கௌரிவிரதம் எனப்பெயர் பெற்றது.

உலகெ டுத்தகே தாரமா மதன்பெய ருலகம்
பலதொ ழும்புரட் டாதியிற் பூருவ பக்கத்
தலகி லட்டமி முதற்றெடுத் தருங்கலை கழியு
நிலவு லாவரு ளவையு நோற்பது நெறியே.

( உபதேசகாண்டம் )

புரட்டாதி மாதப் பூர்வபக்க அட்டமி முதல் அமாவாசைவரையுள்ள இருபத்தொருநாள்கள் அனுஷ்டிக்கப்படுவது இவ்விரதம். அன்றி அபரபக்கப்பிரதமை தொடங்கி சதுர்த்தசிவரையான பதினான்கு நாள்கள் அல்லது அபரபக்கத்தட்டமி முதல் சதுர்த்தசிவரையிலான ஏழுநாள்கள் ஆயினும் அனுஷ்டிக்கலாம். இயலாதவர்கள் ஐப்பசி மாதத்து அமாவாசையன்று அனுஷ்டிக் கலாம்.

முதல் இருபது நாள்களும் சூரிய அஸ்தமனத்தின் பின் ஒருபொழுது உண்டு இரவிலே தருப்பையின் மீது நித்திரை செய்தல் வேண்டும். தினமும் கேதார நாதரை மெய்யன் புடன் வழிபடல் வேண்டும். இருபத்தோராம் நாள் கும்பம்ஸ் தாபித்துக் கேதார நாதரை எழுந்தருளப்பண்ணி வெற்றிலை பாக்கு, பழம் எள்ளுருண்டை, அதிரசம் போன்றவை நிவேதித்துப் பூசைவழி பாடியற்றிக் கேதாரநாதரை மனத்திருத்தி அன்று உபவாசம் இருத்தல் வேண்டும். இயலாதவர்கள் நிவேதனப் பொருட்களை இரவில் உட்கொள்ளலாம். மறுநாட் காலை எட்டரை மணிக்குள்ளாகப் பாரணை பண்ணுதல் வேண்டும். இருபத்தோரிழை கொண்ட நூலைக்கையில் அணியவேண்டும்.

திருக்கைலாய மலையிலே பார்வதி தேவி சமோதராகப் பரமசிவன் எழுந்தருளியிருந்தார். பிரமா, விட்டுனு முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், தும்புரு நாரதர், சனகாதிமுனிவர்களும் பார்வதி பரமேஸ்வரரைத்துதித்துப் பிரதட்சணம் செய்து வணங்கிச் சென்றனர். பிருங்கி என்னும் முனிவர் எல்லோரும் நகைக்கும் படியாகக்கோணைக் (முடக்) கூத்தாடிச்சிவபெருமானை மட்டும் வலம்வந்து வணங்கிச் சென்றார். இதைக் கண்ணுற்ற பார்வதி வெகுண்டு தேவர், முனிவர் யாவரும் நம் இருவரையும் வலம் வந்து வணங்கிச் செல்லப் பிருங்கி மாத்திரம் என்னை வணங்காதுசெல்கின் றானே. இதற்குக்காரணம் யாது ? என்று சிவபிரானிடம் கேட்டார்.

பிருங்கி போகத்தை விரும்பியவன் அன்று. வீடு பேற்றை விரும்பியவன். ஆதலால் அவ்வாறு செய்தான் என்றார் பெருமான். சென்று கொண்டிருந்த பிருங்கியிடம் "எமது அம்சமாகிய இரத்தம் மாமிசம் என்பவற்றைக்கொடு" என்றாள் அம்பாள். பிருங்கியும் தன்னுடலில் உள்ள இரத்தம் மாமிசம் என்பவற்றை உதறிவிட்டான். முனிவர் உடல் வலிமைகுன்றி நிற்பதற்குச்சக்தியின்றியிருந்தார். பிருங்கியின் நிலை கண்ட இறைவன் "நீ இவ்வாறு அசத்தனாய் நிற்பதேன்?" என்றார். தேவியை வழிபடாது உம்மை மாத்திரம் வழிபட்டதற்குத்தேவி கொடுத்த தண்டனை அது என்றார் முனிவர். பிருங்கிமீது இரக்கம்கொண்ட இறைவன் ஒரு ஊன்றுகோல் வழங்கினார். அதன் உதவியோடு தன் ஆச்சிரமம் சென்றார் பிருங்கி.

பார்வதிதேவி கைலாயத்தைவிட்டகன்று பூலோகத்திற்கு வந்து கௌதம முனிவர் ஆச்சிரமத்தில் எழுந்தருளினாள். அம்பாளைக் கண்ட கௌதமர் வலம் வந்து வீழ்ந்து பணிந்தார். பெருமாட்டி "நீர் இவ்விடம் எழுந்தருளிய காரணம் யாது?" என முனிவர் வினவினார். முன்னர் நிகழ்ந்த சம்பவங்களை எல்லாம் அம்பாள் கூறினார். "இறைவன் வாமபாகத்திற் பொருத்துவதற்குரிய விரத மொன்று உரைக்கவேண்டுமென" முனிவரை அம்பாள் கேட்டாள்.

கேதார விரதம் என்னும் சிறப்புடைய சிவவிரத மொன்றுண்டு அதை அனுஷ்டித்தால் எண்ணியவை நிறைவெய்தும் என்றும் இவ்விரதம் அனுஷ்டிக்கும் முறையையும் எடுத்தியம்பினார் முனிவர்.

பார்வதிதேவி முறையாகக்கேதார விரதத்தை நோற்றாள். இதனால் மகிழ்ந்த பரமேஸ்வரன் அம்பாள் முன் காட்சி கொடுத்தார். அம்பாள் இறைவன் திருவடிகளை நறுமணம் கமழ் மலர் கொண்டு அர்ச்சித்து, இவ்விரதத்தை அனுஷ்டிப்பவர்கட்குச் சற்புத்திரர் முதலாம் செல்வப் பேறுகள் அளித்தருள வேண்டுமென வேண்டிக்

கொண்டாள். இறைவனும் அவ்வாறே அனுக்கிரகித்து, கௌதம முனிவருக்கும் அனுக்கிரகம் புரிந்து அம்பாளோடு அர்த்தநாரீஸ்வரராகக் கைலையங் கிரியை அடைந்தார்.

சித்திராங்கதன் என்னும் கந்தருவன் திருநந்திதேவர் மூலம் இவ்விரத மகிமையை அறிந்து, உஜ்ஜனிஅரசனான வச்சிர தேயனுக்குக்கூறினான். வச்சிரதேயன் இவ்விரதத்தை நோற்றுச்சற்புத்திரப் பேறு பெற்றுக் கீர்த்தியோடு ஆட்சிசெய்தான்.

உஜ்ஜனிநகரத்தில் புண்ணியவதி, பாக்கியவதி என்னும் இரு பெண்கள் இவ்விரதத்தை அனுஷ்டித்துப்பேறு பெற்று இனிது வாழ்ந்தனர்.

திருமால் வைகுந்தப்பதவி பெற்றதும், பிரமாஉலகைப்படைக்கும் உயர் பதவி பெற்றதும் கேதார விரதமனுஷ்டித்ததன் பலனேயாம்.

இந்திரன் இவ்விரதத்தை நோற்று பொன்னுலகை ஆளும் பேற்றையும், ஐராவத வெள்ளையானை வாகனத்தையும் கொண்டான். விசுத்தன் என்னும் அந்தணன் இவ்விரதத்தை அனுஷ்டித்துப் புதல்வர்கள் பலரைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்து இறைவன் திருவடியடைந்தான்.

# மெய்கண்டார் ஆதீன வெள்ளி விழா

**இராம. நகுலேசன்**

"சைவ நன் னெறிதான் தழைத்தோங்குக தெய்வ வெண்திருநீறு சிறக்கவே" என்னும் கூற்றுக்கிணங்க இற்றைக்கு ஆறுநூற்றாண்டுகளுக்கு மேலாக சைவத்தையும் தமிழையும் கட்டிக்காத்த பெருமை ஆதீனங்களையே சாரும். இந்த வகையில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் சைவசமய குரவர்களின் திருமுறைகளையும், மெய்கண்டார் முதலிய சந்தான குரவர்களால் அருளிச் செய்யப்பட்ட சைவ சிந்தாந்த சாத்திர நெறிகளையும் போற்றிப்பாதுகாத்து, சைவமாநாடுகள், கருத்தரங்குகள், சைவப்பிரசங்கங்கள் பல்வேறு பணிகளை ஆற்றி மேலும் பல அரிய பணியில் தடம் பதித்துச் செல்கிறது. இலங்கை மெய்கண்டார் ஆதீனம்.

இலங்கை மெய்கண்டார் ஆதீனம் 1972ம்அண்டு சித்திரை பூரணை நாள் காஞ்சி மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிகபரமாச்சாரிய சுவாமிகளால் கொழும்பு நகரிலே தாபிக்கப் பெற்றது. இதன் முதல் குரு முதல்வராகத் திகழ்ந்தவர் சீலத்திரு ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகளாவார். இவர்கள் பூர்வ ஆச்சிரமத்தில் தொண்டர் அருளம்பலவர் என்னும் திருநாமத்துடன் காரைநகரில் வாழ்ந்தவர். இவர் கருவிலே திருவுற்று சைவசித்தாந்த, வேதாந்த, மறைஞான வித்தகராகத் திகழ்ந்தவர். கொழும்பு முதல் யாழ் நகர்வரையுள்ள பல்வேறு சைவத் தமிழ் கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள சைவ நிறுவனங்களின் அனுசரணையுடன் அறிவொளி பாய்ச்சியவர் என்பதை சைவ உலகு அறிந்தது. பல இடங்களிலும் சைவ ஞானமிர்தத்தை ஊட்டி வந்த சீலத்திரு தம்பிரான் சுவாமிகள் 1990 சித்திரைப் பரணி நாளிலே சிவபெருமான் திருவடி நிழலையணைந்தார். அவரது சமாதி கீரிமலையில் உளது. ஈழநாட்டில் நிகழும் இடர்ப்பாடுகளால் சுவாமி அவர்கள் புதிய ஒரு முதல்வரை நியமிக்க முடியாது போனமை துரதிஷ்டமானதே. ஆயினும் அவரது திருவருட் சிறப்பால் மெய்கண்டார் ஆதீனப்பணி இடரின்றி தொடர்ந்தது.

சுவாமிகளின் சமாதி நிலைக்குப்பின், பல்வேறு ஆன்மீகப் பணிகளை சுவாமிகளுடன் உடனிருந்த ஆற்றி வந்த சைவப்புலவர்மணி, வித்துவான் செல்லையா அவர்களின் அரும்பணி இவ்வாதீனத்தின் புதிய செழுமைக்கு காரணமானது. ஆசிரியராக, அதிபராக சமூகத்தில் நுழைந்த திரு. செல்லையா அவர்கள் தன்னுடன் ஆசிரிய கலாசாலை ஆத்மீக நண்பனாய் திகழ்ந்த சிந்தாந்த சரபம் சித்தாந்த கலாநிதி, க. கணபதிப்பிள்ளை B.A. அவர்களை சைவ உலகின் சார்பில் புதிய முதல்வர் பதவியை ஏற்குமாறு விடுத்த விண்ணப்பத்தை ஏற்று இவ்வாதீனத்தின் குரு முதல்வரானார். எனினும் தாம் சமகாலத்தில் மேற்கொண்டிருந்த சைவப்பாதுகாப்பு சேவை, இயக்குனர் பணியும், சைவசித்தாந்த உயர்நிறுவன தாபகர் பணியுமே தன்னை இப்பணிக்கும் உடன்பட வைத்தது. என்றும், தமது உடல் நிலை தளர்ச்சிகாரணமாகவும், தவநிலையில் மௌனித்திருக்க எண்ணிய காலம் நெருங்கியுள்ளதாலும் இதை தற்காலிகமாக பொறுப்பேற்பதாய் அருளியுள்ளார் எனவே 2ம் குருமுதல்வராயுள்ள சீலத்திரு ஞானப்பிரகாச பரமாமாச்சாரிய சுவாமிகள் சும்மாயிருக்கும் சிவநிலையில் திழைக்க, புதியதோர் குருமுதல்வரை நியமிக்கவுள்ளார்.

இன்றைய ஆதீனத்தை யாழ்ப்பாணத்திலும், வவுனியா நகரிலும் மீளமைப்புச் செய்து இயக்கி வருபவராகிய வித்துவான் செல்லையா அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள மெய்கண்டார் ஆதீன வெள்ளிவிழாவுக்குச் சைவ உலகின் ஆதரவு அன்புடன் வேண்டப்படுகிறது.

அன்பே சிவம்

# நினைவிற் கொள்வதற்கு.......!

| | | | | |
|---|---|---|---|---|
| புரட்டாதி | 1. | 17.09.97 | புதன் | மாதப்பிறப்பு, ஷடசீதீபுண்ணிய காலம் |
| | | | | காலை 7.37 முதல் 2.01 வரை |
| | | | | மாளய பக்ஷாரம்பம் |
| | 3. | 18.09.97 | வெள்ளி | சங்கட ஹர சதுர்த்தி விரதம் |
| | 4. | 20.09.97 | சனி | புரட்டாதிச் சனி |
| | | | | மஹா பரணி |
| | 5. | 21.09.97 | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| | 6. | 22.09.97 | திங்கள் | திருநாளைப் போவார் குருபூசை |
| | 11. | 27.09.97 | சனி | புரட்டாதிச் சனி |
| | | | | ஏகாதசி விரதம் |
| | 13. | 29.09.97 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | | | | அருணந்தி சிவாச்சாரியார் குருபூசை |
| | 14. | 30.09.97 | செவ்வாய் | கேதாரேஸ்வர விரதம் |
| | 15. | 01.10.97 | புதன் | அமாவாசை விரதம் |
| | | | | மாளய பக்ஷ முடிபு |
| | 16. | 02.10.97 | வியாழன் | நவராத்திரி விரதாரம்பம் |
| | 16. | 04.10.97 | சனி | புரட்டாதிச் சனி |
| | 19. | 05.10.97 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| | 21. | 07.10.97 | செவ்வாய் | ஷஷ்டி விரதம் |
| | 22. | 08.10.97 | புதன் | சரஸ்வதி பூஜாரம்பம் |
| | 24. | 10.10.97 | வெள்ளி | மஹா நவமி |
| | | | | சரஸ்வதி பூஜை, ஏனாதிநாதர் குருபூசை |
| | 25. | 11.10.97 | சனி | விஜயதசமி |
| | | | | கேதார கௌரி விரதாரம்பம் |
| | | | | புரட்டாதிச் சனி |
| | 26. | 12.10.97 | ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| | 27. | 13.10.97 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | | | | நரசிங்க முனையரையர் குருபூசை |
| | 28. | 14.10.97 | செவ்வாய் | நடேசரபிஷேகம் |
| | | | | கடையிற் சுவாமி குருபூசை |
| | 29. | 15.10.97 | புதன் | பூரணை விரதம் |
| | 30. | 16.10.97 | வியாழன் | உருத்திர பசுபதியார் குருபூசை |
| | 31. | 17.10.97 | வெள்ளி | விஷு புண்ணிய காலம் |
| | | | | பகல் 2.33 முதல் இரவு 10.33 வரை |

# நினைவிற் கொள்வதற்கு.......!

| | | | | |
|---|---|---|---|---|
| ஐப்பசி | 1. | 18.10.97 | சனி | மாதப்பிறப்பு,<br>கார்த்திகை விரதம் |
| | 2. | 19.10.97 | ஞாயிறு | சங்கட ஹர சதுர்த்தி விரதம் |
| | 6. | 23.10.97 | வியாழன் | சக்தியார் குருபூசை |
| | 7. | 24.10.97 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| | 10. | 27.10.97 | திங்கள் | ஏகாதசி விரதம் |
| | 11. | 28.10.97 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| | 12. | 29.10.97 | புதன் | இரவு சந்திர உதயத்தில் நரக<br>சதுர்த்தசி ஸ்நானம். |
| | 13. | 30.10.97 | வியாழன் | தீபாவளி |
| | 14. | 31.10.97 | வெள்ளி | ஐப்பசிவெள்ளி<br>அமாவாசை விரதம்,<br>கேதாரகௌரி விரதம்<br>மெய்கண்ட தேவர் குருபூசை |
| | 15. | 01.11.97 | சனி | ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| | 16. | 02.11.97 | ஞாயிறு | பூசலார் குருபூசை |
| | 18. | 04.11.97 | செவ்வாய் | சதுர்த்தி விரதம்<br>ஐயடிகள் காடவர்கோன் குருபூசை, |
| | 19. | 05.11.97 | புதன் | ஸ்கந்தஷஷ்டி விரதம் |
| | 20. | 06.11.97 | வியாழன் | ஸ்கந்தஷஷ்டி விரதம் |
| | 21. | 07.11.97 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| | 24. | 10.11.97 | திங்கள் | உத்தான ஏகாதசி விரதம் |
| | 25. | 11.11.97 | செவ்வாய் | சாதுர் மாஸய விரத பூர்த்தி |
| | 26. | 12.11.97 | புதன் | பிரதோஷ விரதம் |
| | 27. | 13.11.97 | வியாழன் | திருமூலர் குருபூசை<br>ஐப்பசிப்பரணி |
| | 28. | 14.11.97 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி<br>பூரணை விரதம்<br>கார்த்திகை விரதம்<br>நெடுமாறர் குருபூசை |
| | 29. | 15.11.97 | சனி | இடங்கழியார் குருபூசை |

